வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 13.01.2025 திங்கட்கிழமை | இதழ் : 13 | பக்கங்கள் : 12

## அநுரவின் அரசிலும் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு சாத்தியமில்லை!

### அடித்து சொல்கிறார் தயான் ஜயதிலக்க



கொழும்பு, ஜனவரி 13

**ஜனாதிபதி அநுரகுமாரவின் அரசில் தமிழ் மக்களுக்கான அபிலாஷைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கான அதிகாரப் பகிர்வுக் குரிய சாத்திய நிலைமைகள் மறைந்து வருகின்றன என்று குறிப்பிட்டுள்ள இலங்கையின் மூத்த இராஜதந்திரி கலாநிதி தயான் ஜய திலக்க, கடந்த காலத்தில் தமிழ் அரசியல்வாதிகள் செய்துள்ள பத்து பாவங்களையும் பட்டியலிட்டுச் சுட்டிக்காட்டியுள்ளார்.**

ஜனாதிபதி அநுர குமாரவின் தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கத்தில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கான சாத்தியப்பாடுகள் சம்பந்தமாக தனது கருத்துக்களை வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் மக்களின் தேசியப் பிரச்னைகளுக்கான தீர்வினைக் காண்பதற்கு 1987ஆம் ஆண்டு ஜூலை 29ஆம் திகதி இந்திய, இலங்கை ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்டதன் பின்னணியில் உருவான 13ஆவது திருத்தச் சட்டத்தை அடுத்து 11

## நாளை சீனா செல்கிறார் ஜனாதிபதி அநுரகுமார!

கொழும்பு, ஜன. 13

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாளை செவ்வாய்க்கிழமை பொங்கல் தினத்தன்று சீனாவுக்கு விஜயம் செய்ய உள்ளார். வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலை, துறைமுகம் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க உட்பட அரச அதிகாரிகள் இந்த விஜயத்தில் பங்கேற்கின்றனர். 11

## கடற்றொழிலுக்கு சென்ற மீனவர் திடீர் உயிரிழப்பு!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஜன. 13

குருநகர் கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களில் ஒருவர் நேற்று காலை உயிரிழந்துள்ளார். இதன்போது குருநகர் பகுதியை சேர்ந்த அல்போன்சோ சந்தியாப்பிள்ளை (வயது 58) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இரண்டு மீனவர்கள் நேற்று முன்தினம் 11

## வடக்கு கமநல சேவை நிலையங்களில் பயன்பாடின்றி 500 உழவு இயந்திரங்கள்

கிளிநொச்சி, ஜன. 13

வடக்கு மாகாணத்தில் உள்ள 52 கமநல சேவை நிலையங்களில் இந்திய அரசின் நன்கொடையின் கீழ் வழங்கப்பட்ட 500 வரையான உழவு இயந்திரங்கள் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக எந்தவித பயன்பாடுகளும் இன்றி காணப்படுகின்றது.

குறித்த உழவு இயந்திரங்களை விவசாயிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கி வைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

வடக்கு மாகாணத் திற்குட்பட்ட வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு விவசாய சேவை மையங்களில் ஆளுநரின் வழிகாட்டுதலின் கீழ் இந்திய அரசாங்கத்தால் நன்கொடையாக வழங்கப்பட்ட 500 வரையான உழவு இயந்திரங்கள் உள்ளன.

விவசாயிகள் 11

## மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளை ஆராய இந்திய உதவித் தூதுவர் களத்தில்!

யாழ்ப்பாணம்,ஜன. 13

சங்கானை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட அலைமகள் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தினர் மற்றும் யாழ்ப்பாணம் இந்திய உதவி தூதுவர் சாய் முரளி ஆகியோருக்கும் இடையில் கலந்துரையாடலொன்று நேற்று நடைபெற்றுள்ளது.

இதன்போது, மீனவர்கள் எதிர்கொள்ளும் வாழ்வாதார பிரச்னைகள் குறித்து கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த கடற்றொழிலாளர்கள் மீன்பிடியில் ஈடுபடும் பகுதிக்குச் சென்று பார்வையிட்ட யாழ்ப்பாணம் இந்திய உதவி தூதுவர், அங்கு இழுவை படகுகளால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் நிலை குறித்தும் அவர்களின் தேவைகள் குறித்தும் ஆராய்ந்துள்ளார். 11

## இடைநடுவே கைவிடப்பட்ட அரச வீட்டுத்திட்டங்களை மீள ஆரம்பிக்க தீர்மானம்

கொழும்பு, ஜன. 13

இடைநடுவே கைவிடப்பட்டுள்ள 12 அரச வீட்டுத் திட்டங்களின் நிர்மாணப் பணிகளை மீள ஆரம்பிக்க நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

நகர அபிவிருத்தி அதிகார சபை, வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை உள்ளிட்ட பல நிறுவனங்களின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த தீர்மானம் எட்டப்பட்டதாக 11

## ஒன்றரை வயது குழந்தைக்கு எமனாகிய கச்சான் பருப்பு!

### சுன்னாகம் பகுதியில் துயரம்

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ்ப்பாணத்தில் ஒன்றரை வயதுக் குழந்தை ஒன்று கச்சான் பருப்பு புரைக்கேறியதால் உயிரிழந்துள்ளது. சுன்னாகம், ஐயனார் வீதி பகுதியை சேர்ந்த சசிதரன் டனியா என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குழந்தை நேற்று முன்தினம் கச்சான் சாப்பிட்ட வேளை புரைக்கேறியது. பின்னர் 11

## வாகன இறக்குமதியால் மக்களுக்கு பலனில்லை!

கொழும்பு, ஜன.13

எதிர்வரும், பெப்ரவரி மாதம் முதல் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கான வரி கொள்கைகளை அரசாங்கம் அறிவித்திருந்தாலும் அதன் நன்மைகள் வாகன விற்பனையாளர்களால் அநீதியான முறையில் பெற்றுக் கொள்ளப்படும் என பொருளியல் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தநிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் தலையிட வேண்டும் என அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

கடந்த ஐந்து வருடமாக காணப்பட்ட வாகன இறக்குமதிக்கான தடை எதிர்வரும் பெப்ரவரி 11

## புலம்பெயர் இலங்கை ஏதிலிகளின் பிரச்னைகள் தொடர்பில் ஆராய்வு

சென்னை, ஜன. 13

பல காலமாக ஏதிலிகளாக வாழும் இலங்கையர்களை சந்தித்ததுடன், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

சென்னையில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான உலகத் தமிழ் புலம்பெயர்ந்தோர் தினத்தின் இறுதி நாளான நேற்று தமிழகத்தில் வாழும் புலம்பெயர் இலங்கை ஏதிலிகளின் விற்பனை நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன

தென்னிந்திய வர்த்தக மற்றும் தொழில்துறைச் சங்கத்தினால் இந்தக் கண காட்சி ஒழுங்குபடுத்தப்பட்டது.

இதேவேளை, புலம்பெயர் இலங்கை ஏதிலிகளின் தொழில்துறை ஊக்கமானது மிகுந்த மன மகிழ்வை உண்டாக்குவதாக 11

## மார்ச் அல்லது ஏப்ரலில் உள்ளூராட்சித் தேர்தல்!

### மகிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 13

மார்ச் மாத இறுதியில் அல்லது ஏப்ரல் மாத தொடக்கத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த முடியும் என முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

பாணந்துறை பகுதியில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சித் தேர்தலுக்காக முன்னதாக கோரப்பட்டிருந்த வேட்புமனுக்களை இரத்து செய்து புதிய வேட்புமனுக்களைக் கோருவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரமளிக்கும் வகையிலான சட்டமூலம் கொண்டுவரப்பட்டுள்ளது. குறித்த சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நிறை வேற்றுவதற்குப் போதியளவு கால அவகாசம் உள்ளது.


எனவே, அதனை நிறைவேற்றி மூன்று மாதங்களுக்குள் உள்ளூராட்சி மன்ற தேர்தலை 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# கலாசாலையில் சிறப்புற இடம்பெற்ற ஆசிரியர் சான்றிதழ் வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம், ஜன. 13

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கற்று வெளியேறி பரீட் சைத் திணைக்களம் நடத்திய இறுதித் தேர்வில் சித்தியடைந்த 174 ஆசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்று முன் தினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெற்றது

கலாசாலை அதிபர் சந்திர மௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கி வைத்தார்.(அ)

# 09 வருடங்களாக கட்டப்படும் சுகாதார அமைச்சின் கட்டடம்

## உடன் பணிகளை முடிக்க அமைச்சர் பணிப்புரை

கொழும்பு, ஜன. 13

சுகாதார அமைச்சின் புதிய அலுவலக வளாகக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகளை அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் முடிக்குமாறும், இந்த ஆண்டுக்குள் 07 மாடிகளின் பணிகளை நிறைவுறுத்துமாறும் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

சுகாதார அமைச்சால் நேற்று ஊடகங்களுக்கு வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள காசல் வீதி மகளிர் மருத்துவமனைக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டு வரும் சுகாதார அமைச்சின் புதிய 16 மாடி அலுவலக வளாகத்தின் கட்டுமானப் பணிகளின் தற்போதைய நிலையை ஆய்வு செய்த பின்னர் நடைபெற்ற கலந்துரையாடலின் போது அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

2016 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகள், கொவிட் தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக நிறுத்தப்பட்டதுடன், தற்போது அரசாங்க நிதியைப் பயன்படுத்தி கட்டுமானத்தை மீண்டும் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது, சுகாதார அமைச்சின் ஒரு பகுதி வாடகைக்கு தனியார் கட்டடத்தில் பராமரிக்கப்பட்டு வருவதுடன், குத்தகை காலத்தை நீடிக்காமல், அந்த அலுவலகங்களை விரைவில் இந்த புதிய கட்டடத்திற்கு மாற்றுவதற்கான அடிப்படைத் திட்டங்களைத் தயாரிக்குமாறு சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

முழு கட்டிடத்தையும் இரண்டு ஆண்டுகளுக்குள் கட்டி முடிப்பதற்கான திட்டங்களைத் தயாரிக்குமாறு மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகத்திற்கு அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார். (அ)

# பாடசாலை மாணவியைக் கடத்திய வான் கைவிடப்பட்ட நிலையில் மீட்பு

கொழும்பு, ஜன. 13

கண்டி மாவட்டம், கெலிஓயா, தவுலகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பரப் பொல பகுதியில் நேற்று பாடசாலை மாணவியொருவர் கடத்தப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

பாடசாலை மாணவி ஒருவரை வலுக்கட்டாயமாக வானில் கடத்தி செல்லும் காட்சிகள் அடங்கிய சிசிடிவி காணொளிகள் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இரண்டு பாடசாலை மாணவிகள் பிரதான வீதியில் நடந்து சென்று கொண்டிருந்தபோது, ஒரு சிறிய கறுப்பு வானில் வந்த குழுவினர், மாணவி ஒருவரை வலுக்கட்டாயமாக கடத்திச் சென்றுள்ளனர்.

உடனடியாக பயந்துபோன மற்றொரு மாணவி அங்கிருந்து ஓடியதுடன், இந்நிலையில் அவரை காப்பாற்றுவதற்கு நபரொருவர் முயற்சித்த போதும் அது பலனளிக்க வில்லை.

கடத்தலுடன் தொடர்புடைய வான் பொலனறுவை நகரில் கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலும், குறித்த வாகனம் வாடகைக்கு பெற்றுக்கொள்ளப் பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

கடத்தப்பட்ட சிறுமி மற்றும் கடத்தலை மேற்கொண்ட நபர் குறித்து எந்த தகவலும் வெளியாகவில்லை.

எவ்வாறாயினும், கடத்தலில் ஈடுபட்ட நபர், கடத்தப்பட்ட மாணவியின் உறவினர் என்பது தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மாணவியின் உறவினர்களால் தவுலகல பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடத்திச் சென்றவர்களை கைது செய்வதற்குரிய விசாரணையை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# உயர்நீதிமன்ற நீதியரசர்கள் நால்வர் சத்தியப்பிரமாணம்!

கொழும்பு, ஜன. 13

நான்கு புதிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் நேற்று காலை ஜனாதிபதி செயலகத்தில், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

அதன்படி, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான ஆர்.எம்.எஸ்.ராஜகருணா, மேனகா விஜேசுந்தர, சம்பத்பி அபேகோன் மற்றும் எம்.எஸ்.கே.பி. விஜேரத்ன ஆகியோர் ஜனாதிபதி முன்னிலையில் புதிய உயர்நீதிமன்ற நீதியரசர்களாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத்குமாநாயக்கவும் கலந்துகொண்டார். (அ)

# வெளிநாட்டவர்களின் அத்துமீறல் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன.13

வெளிநாட்டு பிரஜைகள் சிலர் தொண்டைமானாறு கடற்கரையில் ட்ரோன் மூலம் வீடியோ எடுக்கின்றனர். முல்லைத்தீவில் ரோஹிங்கியா அகதிகள் படகு கரையொதுங்கும் வரை, அந்நிய நாட்டுப் படகு வந்தது கடற்படைக்குத் தெரியாது. இவ்வாறு வெளிநாட்டவர்கள் எமது கடலில் என்ன செய்கிறார்கள் என்று அவதானிக்க முடியாதவர்கள் கிளீன் சிறீலங்கா பற்றிப் பேசி எந்தவிதப் பயனும் இல்லை என்று வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சமாசத்தின் உப தலைவர் நா. வர்ணகுலசிங்கம் தெரிவித்தார்.

வடமராட்சி ஊடக இல்லத்தில் நடைபெற்ற ஊடகச்சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ-02)

# எல்லை தாண்டிய மீன்பிடி; 8 இந்திய மீனவர்கள் கைது!

மன்னார், ஜன. 13

தலைமன்னார் கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடித்த 8 இந்திய மீனவர்கள் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

தலைமன்னாருக்கு வடக்காக உள்ள கடற்பரப்பில், எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் 8 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

இதன்போது, 2 மீன்பிடி படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகக் கடற்படையின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

கைதான மீனவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் கடற்றொழில் பரிசோதகர் காரியாலயத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

# பொலிஸாரால் விசேட சோதனை; 2 பெண்கள் உட்பட 22 பேர் கைது!

கொழும்பு, ஜன 12

இணை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளில் போதைப்பொருள் மற்றும் மதுபானத்துடன் இரு பெண்கள் உட்பட 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அஹுங்கல்ல, பாணந்துறை மற்றும் ரம்புக்கனை ஆகிய பொலிஸ் பிரிவுகளில் நேற்று இந்த சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த சோதனைகளுக்கு பொலிஸ் அதிகாரிகள், பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் மற்றும் இராணுவ அதிகாரிகளின் உதவியையும் பெற்றதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, கைதான சந்தேகநபர்களிடம் இருந்து 83 கிராம் 710 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 15 கிராம் 950 மில்லிகிராம் ஹெரோயின் ஆகியவற்றை பொலிஸார் கைப்பற்றினர்.

மேலும், 525 கிராம் கஞ்சா, சட்டவிரோத மதுபானம் 36 லீற்றர் 750 மில்லிலீற்றர் மற்றும் 1066.5 லீற்றர் கோடா ஆகியவற்றைக் கண்டுபிடித்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
13.01.2025 திங்கட்கிழமை
பிலவ வருடம், மார்கழி 29

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## உள்ளூராட்சித் தேர்தலுக்கான கூட்டுக்கள்

தென்னிலங்கையில் உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்வதற்கான கூட்டுக்கள் தொடர்பிலான பேச்சுக்கள் முகம் காட்ட ஆரம்பித்திருக்கின்றன. தேசிய மக்கள் சக்தியின் அரிதான வெற்றியைத் தொடர்ந்து பாரம்பரிய கட்சிகள் மோசமான பின்னடைவை சந்தித்திருக்கின்றன. இந்த நிலையில் தங்களை அணிதிரட்டிக் கொள்ள பாரம்பரிய கட்சிகள் முயற்சிப்பதில் ஆச்சரியம் இல்லை.

ஜனாதிபதித் தேர்தல் காலத்திலும் ரணில் - சஜித் கூட்டுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், அவை வெற்றியளிக்கவில்லை. தங்களின் வெற்றி தொடர்பில் அதிக எதிர்பார்ப்புடன் இரண்டு தரப்பினரும் இருந்த நிலையில், விட்டுக் கொடுப்பிற்கு இருவருமே தயாராக இருந்திருக்கவில்லை.

இந்த நிலையில் இறுதியில் இருவருமே மோசமான தோல்வியை சந்திருந்தனர். ஒப்பீட்டடிப்படையில் ரணிலை விடவும் மோசமான தோல்வியை சந்தித்தித்தது, சஜித் பிரேமதாஸதான். ஏனெனில், சஜித் ஒப்பீட்டடிப்படையில் கட்சிப் பலத்தோடு இருந்தார் - அவரோடு மலையக மற்றும் முஸ்லிம் கட்சிகள் இருந்தன ஆனாலும், அவரால் கௌரவமான தோல்வியைக் கூட பெற முடியவில்லை.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் ரணில்-சஜித் இருவரையும் ஒன்றிணைப்பதற்கான முயற்சிகள் மீண்டும் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த முயற்சிக்கு பின்னால் இரண்டு விடயங்கள் இருக்கின்றன. ஒன்று, அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் வெற்றியால் கொழும்பின் பாரம்பரிய அரசியல் உயர் அடுக்கினருக்கு ஏற்பட்டிருக்கும் அச்சம். இரண்டு, உள்ளூராட்சித் தேர்தலிலும் தேசிய மக்கள் சக்தியை அதிக பலத்தோடு வெற்றிபெறுமானால், பாரம்பரிய கட்சிகள் தங்களின் அடித்தள அரசியல் கட்டமைப்புக்களை முற்றிலும் இழந்துபோக நேரிடும்.

இந்த நிலைமையை தடுக்கவேண்டுமாயின் தங்களுக்குள் விரும்பியோ விரும்பாமலோ ஒன்றுபடவேண்டிய கட்டாயம் உண்டு என்னும் புரிதல் கொழும்பின் அரசியல் உயர் அடுக்கினர் மத்தியில் ஏற்பட்டிருக்கின்றது. உயர் அடுக்கினர் என்பதில் அரசியல்வாதிகள் மட்டுமல்ல கொழும்புமைய சிவில் சமூகக் குழுக்கள் மற்றும் புத்திஜீவிகளும் அடங்குவர்.

அரசியல் கூட்டுக்கள் இல்லாமல் தேசிய மக்கள் சக்தியை பாரம்பரிய கட்சிகளால் எதிர்கொள்ளவே முடியாது. இந்த நிலைமை தெற்கில் மட்டுமல்ல. வடக்கு, கிழக்கிலும் அதே நிலைமைதான்.

தமிழ் கட்சிகள் இதுவரையில் எதிர்கொண்டிராத வகையிலான போட்டியை இம்முறை எதிர்கொள்ள நேரிடும். தேசிய மக்கள் சக்தி அதிக நாடாளுமன்ற ஆசனங்களுடன் வடக்கு, கிழக்கில் இருக்கின்றது. இந்த நிலையில் உள்ளூராட்சித் தேர்தலில் தங்களுக்குள் பிரிந்து மோதினால் பின்னடைவுகளையே சந்திக்க நேரிடும். நாடாளுமன்ற ஆசனங்களை பெருமளவிற்கு இழந்து போனது போன்று, உள்ளூராட்சி சபைகளையும் இழக்க நேரிடும்.

# மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உள்ளூராட்சி சபைகள் முன்வர வேண்டும்

### வடமாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.13

உள்ளூராட்சி மன்றங்கள் பெற்றுக்கொள்ளும் வருமானங்களை தமது பிரதேச மக்களின் வாழ்வாதாரம் உள்ளிட்ட ஏனைய மேம்பாடுகளுக்கு செலவு செய்யவேண்டும். அதைவிடுத்து அதனை நிரந்தர வைப்பிலிட்டு சேர்த்து வைத்துக்கொண்டிருக்கக்கூடாது- இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.



பருத்தித்துறை நகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பருத்தித்துறை மரக்கறி பொதுச் சந்தை திறந்து வைக்கப்பட்டது.

இதில் உரையாற்றிய ஆளுநர், பௌதீக வளங்களின் முன்னேற்றம் என்பது அபிவிருத்திக்கு இன்றியமையாதது. அதேபோன்று தனித்து பௌதீக வளங்களின் முன்னேற்றம் மாத்திரமும் அபிவிருத்தியாகிவிடாது. எங்களின் சேவையை மேம்படுத்தும் போதுதான் அபிவிருத்தி முழுயடையும். எனவே மக்களுக்கு தரமான, அன்பான, விரைவான சேவையை வழங்க முன்வர வேண்டும்.

ஜனாதிபதியின் எண்ணக்கருவில் முன்னெடுக்கப்படும் 'கிளீன் சிறீலங்கா' வேலைத் திட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு முக்கிய பங்கிருக்கின்றது. அதைச் சிறப்பாக செயற்படுத்த வேண்டும். மக்கள் நம்பிக்கை வைக்கும் அரச சேவையை உருவாக்க வேண்டும்- என்றார். (எ-02)

# யாழில் கேரள கஞ்சாவுடன் இளைஞன் கைது!

யாழ்ப்பாணம்,ஜன.13

திருநெல்வேலி பகுதியில் கேரளக் கஞ்சாவுடன் விசுவமடு பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், குறித்த நபர் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது, பொலிஸார் வீதியில் அவரை வழிமறித்து சோதனையிட்டுள்ளனர்.

இந்த நிலையில், அவரது உடைமையிலிருந்து 01 கிலோ 345 கிலோ கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டதோடு, மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டது.

இதேவேளை, குறித்த நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# 320 விழிப்புலனற்ற குடும்பங்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவி


யாழ்ப்பாணம், ஜன.13

யாழ். விழிப்புலனற்றோர் சங்கம், சந்நிதியான் ஆச்சிரமத்துக்கு விடுத்த கோரிக்கைக்கு அமைய, 320 விழிப்புலனற்ற குடும்பங்களுக்கு 500,000 ரூபாய் பெறுமதிில் தைப்பொங்க லுக்காக அரிசி உள்ளிட்ட பொருட்கள் வழங்கப்பட்டன.




யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலைவர் யோ. சுதாகரன் தலைமையில் சங்கத்தின் யாழ்ப்பாணத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற இந்த உதவிகள் வழங்கும் நிகழ் வில் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள், தொண்டர்களுடன் கலந்துகொண்டு பொங்கல் பொருட்களை வழங்கினார். (எ-02)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். சொந்த பந்தங்கள் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். மனதிற்கு இதமான செய்தி வரும்.

**இடபம்**

கணவன் - மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். புது முடிவுகளை எடுப்பீர்கள். கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். அழகும் இளமையும் கூடும். நீண்ட நாள் பிரச்னை தீரும்.

**மிதுனம்**

ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமையால் சோர்வாககாணப்படுவீர்கள். சில விஷயங்களுக்கு அனுபவ அறிவை பயன்படுத்துவது நல்லது. திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

**கடகம்**

கணவன் - மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். செலவுகள் கட்டுக்கடங்காமல் போகும். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். நிதானம் தேவைப்படும் நாள்.

**சிம்மம்**

குடும்பத்தில் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். நெடுநாட்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். உற்சாகமான நாள்.

**கன்னி**

நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள்.

**துலாம்**

கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். விலகிநின்றவர்கள்விரும்பிவருவார்கள்.

**விருட்சிகம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த ஒரு காரியத்தையும் போராடி முடிக்க வேண்டி வரும். அக்கம்- பக்கம் இருப்பவர்களை அனுசரித்துப் போங்கள். முன்கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

**தனுசு**

எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். மூத்த சகோதரர் வகையில் உதவிகள் கிடைக்கும். மனைவி வழி உறவினர்கள் பக்க பலமாக இருப்பார்கள். எல்லோரும் மதிப்பார்கள்.

**மகரம்**

குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும்.விருந்தினர்கள் வருகையால் வீடு களைக்கட்டும். அமோகமான நாள்.

**கும்பம்**

புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். புதுமை படைக்கும் நாள்.

**மீனம்**

கடந்த கால சுகமான அனுபவங்கள் எல்லாம் மனதில் நிழலாடும். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். நீண்ட நாட்களாக வர வேண்டிய பணத்தை போராடி வசூலிப்பீர்கள்.


# விவேகானந்தரின் பிறந்த தினம் அனுஷ்டிப்பு

வவுனியா, ஜன.13

சுவாமி விவேகானந்தரின் 162ஆவது பிறந்த தின நிகழ்வு, வவுனியா புகையிரத நிலைய வீதிலுள்ள நினைவுத் தூபியில் நேற்றுக் காலை நடைபெற்றது.

சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் மற்றும் வவுனியா நகர சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவரது சிலைக்கு, மலர் மாலை அணிவித்து, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. அவர் தொடர்பான நினைவுரைகளை தமிழ்மணி அகளங்கன் மற்றும் மாணவர்கள் வழங்கினர்.

இந்த நிகழ்வில், சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத் தலைவர் ப. சத்தியநாதன் மற்றும் உறுப்பினர்கள், நகரசபை செயலாளர் அ. பாலகிருபன், உள்ளூராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்கள், ஓட்டோ உரிமையாளர் சங்க தலைவர் ரவீந்திரன், சமூக ஆர்வலர்கள், பொது மக்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ)



# “அரிசியின் சந்தை விலையை தீர்மானிக்கும் சக்தியாக கூட்டுறவுத்துறை மாற வேண்டும்”

யாழ்ப்பாணம்,ஜன.13

நாட்டில் அரிசியின் சந்தை விலையை தீர்மானிக்கும் சக்தியாக கூட்டுறவுத்துறை மாற வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

கைதடி ஐக்கிய மகளிர் சங்க ஏற்பாட்டில் கைதடி சைவ ஐக்கிய சங்க மண்டபத்தில் “அரிசி அரசியலும் அதனை எதிர்கொள்வதில் கூட்டுறவின் வகிபாகமும்” என்ற தலைப்பில் கலந்துரையாடல் நடைபெற்றது. இதில், வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் தலைவர் கலாநிதி அகிலன் கதிர்காமர் மற்றும் வடகிழக்கு மாகாண விவசாய மேம்பாட்டு கழக உறுப்பினர் தனபாலசிங்கம் துளசிராம் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

அரிசியின் அரசியலை பற்றி விளக்கிய கலாநிதி அகிலன் கதிர்காமர், இலங்கையின் அரசியல் வரலாற்றில் அரிசியின் முக்கியத்துவம் பற்றி விளக்கியிருந்தார். 1953ஆம் ஆண்டு அரிசியின் விலையை சடுதியாக அரசாங்கம் அதிகரித்ததால் பெரும் ஹர்த்தால் வெடித்தது.இவ்வாறான போராட்டத்தால் 25 வீதத்தால் அரிசியில் தன்னிறைவடைந்திருந்த இலங்கை சில தசாப்தங்களிலே 90 வீதம் தன்னிறைவையடைந்திருந்தது- என்றார். இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு மத்தியில் அரிசியானது எமது உணவுப் பாதுகாப்புக்கு முக்கியமானதொன்றாகும் எனவும் வலியுறுத்தினார். அரிசி நாட்டுக்கு போதுமான அளவு உற்பத்தியாகின்ற போதிலும் அதனை விநியோகிப்பதில் உள்ள பிரச்னையால் மக்களுக்கு உரிய முறையில் சென்றடையாமல் உள்ளது. இந்தப் பின்னணியில் தான் கூட்டுறவு முக்கியமான சமூக நிறுவனமாக உள்ளது. கூட்டுறவால் விவசாயிகளின் வாழ்வாதாரத்தில் விஸ்திரப்படுத்துவதுடன் உணவு பாதுகாப்புக்காக உணவு விநியோகம் செய்யும் பொது நிறுவனமாகவும் தொழிற்படும். கூட்டுறவால் அரிசியின் விலையை சந்தையில் தீர்மானிக்கும் சக்தியாகவும் மாறமுடியும்- என்றார். (எ)

# கைதடி சைவ ஐக்கிய சங்க நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், ஜன.13

சைவத்துக்கும், தமிழுக்கும் தொண்டாற்றுவதற்காக கைதடியில் 100 ஆண்டுகளுக்கு முன்பாக உருவாக்கப்பட்ட சைவ ஐக்கிய சங்கமானது நூற்றாண்டு விழாவை கொண்டாடியது. யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தால் வழங்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்தும், மேலதிக வேலைகள் வேறு சில நலன்விரும்பிகளின் நிதியிலிருந்தும் கைதடி சைவ ஐக்கிய சங்கத்தின் கட்டடம் புனரமைப்பு செய்யப்பட்டது. புனரமைப்பின் பின்னராக முதலாவது நிகழ்வாக ஆறுமுக நாவலர் விழா சிறப்பாக நடத் தப்பட்டது. இந்த நிகழ்வில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன், மருத்துவ நிபுணர் தம்பிப்பிள்ளை தவச்சேந்தன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். (எ)



# திருமறை கலாமன்றத்தின் பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன.13

திருமறைக் கலாமன்றம் நடத்தும் பொங்கல் விழா இம்முறையும் காலை, மாலை நிகழ்வுகளுடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பொங்கல் தினமாகிய நாளை 14 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 5.30 மணிக்கு இலக்கம் 238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் பணியகத்தில் பொங்கல் வைபவமும் அதனைத் தொடர்ந்து காலை 7. 00 மணிக்கு இலக்கம் 17 ,மார்ட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைஞானசுரபி தியான இல்லத்தில் பண்பாட்டு வழிபாடும் நடைபெறும்.அதற்குப் பதிலாக எதிர்வரும் 18ஆம் திகதி சனிக் கிழமை மாலை 6. 00 மணிக்கு இலக்கம் 238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# சிறப்பாக நடைபெற்ற அறுவடை விழா

மன்னார், ஜன.13

மன்னார் - மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இலுப்பைக் கடவை பரங்கி கமம் பகுதியில் விவசாயிகளால் முன்னெடுக்கப்பட்ட தமிழர் உணவுப் பண்பாட்டியல் தொடக்க விழாவான அறுவடை விழா சிறப்பாக நடைபெற்றது.

இலுப்பை கடவை கமக்கார அமைப்பின் தலைவர் வி. எஸ். சிவகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் கலந்துகொண்டு தமிழர் பாரம் பரிய பண்பாட்டு முறைப்படி முதல் அறுவடையை தொடங்கி வைத்தார். (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் வரைந்த பாதையில் விலகாது செல்கிறார் அநுர!

## ராஜித சேனாரத்ன சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 13

**முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை மீட்டெடுப்பதற்காக வரைந்த பாதையில் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிப் பீடமேறிய ஜனாதிபதி அநுரகுமார பயணித்துக் கொண்டிருக்கின்றார் என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.**



சமகால நிலைமைகள் சம்பந்தமாக கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தேர்தல் மேடைகளில் பல வாக்குறுதிகளை வழங்கினார். மின்சாரக்கட்டணம், எரிபொருள் கட்டணம், அரசி விலை என்று பட்டியல் நீண்டதாக அமைகின்றது.

இதற்கு மேலதிகமாக, சர்வதேச நாணய நிதியத்தின் உடன்பாட்டையும் மீளமைப்பதாகவும் வாக்குறுதிகளை தேசிய மக்கள் சக்தியின் அத்தனை உறுப்பினர்களும் அளித்திருந்தார்கள்.

ஆனால் தற்போது அவர்களால் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு முடிந்திருக்கவில்லை. அவர்கள் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை மீட்டெடுப்பதற்காக வகுத்துக்கொண்ட பொருளாதார மீட்சிப் பாதையையே தெரிவு செய்துள்ளனர்.

விசேடமாக அநுரகுமார திஸாநாயக்க அந்தப் பாதையில் சற்றும் விலகாமல் பயணிக்கின்றார். ஆகவே அநுர தலைமையிலான அரசாங்கத்தினர் பொதுமக்களிடத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் நாட்டை மீட்கும் திட்டம் சரியானது என்பதை வெளிப்படையாக கூறவேண்டியவர்களாக உள்ளார்கள்.

இந்த விடயத்தில் அரசாங்கத்தின் மனச்சாட்சியுடன் உண்மையான நிலைமைகளை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

அத்துடன் தாங்கள் ஏலவே வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது என்பது தான் யதார்த்தம் என்பதையும் வெளிப்படுத்தவேண்டும்-என்றார். (அ)

# பரிசில் வழங்குவதாகக் கூறி பல லட்சம் ரூபா பண மோசடி

கொழும்பு, ஜன. 13

புத்தளம் பகுதியில் பொது மக்களிடம் தொலைபேசி மூலம் தொடர்புகளைக் கொண்டு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படுவதாக கூறி வங்கிக் கணக்கு அட்டை யின் இரகசிய இலக்கத்தைப் பெற்று பண மோசடியில் 6 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் பெறுமதியான பரிசில்கள் தருவதாக ஏமாற்றி பண மோசடியில் ஈடுப்பட்டதாக புத்தளம் பொலிஸ் நிலையத்தில் மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

முறைப்பாட்டுக்கமைய புத்தளம் பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினர் நேற்று முன் தினம் இரவு 6 இளைஞர்களைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.

இதன்போது அவர்களிடமிருந்து ஒரு இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா பணம், 6 கையடக்கத் தொலைபேசிகள், 9 வங்கி அட்டைகள், சிம் அட்டைகள் ஆகியவற்றை பொலிஸார் கைப்பற்றினர்.

இவ் 6 பேரும் புத்தளம் மற்றும் கரம்பை பகு திகளைச் சேர்ந்த 18 மற்றும் 22 வயதுக் குற்பட்டவர்களென பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஜன. 13

குருநாகல் மாவட்டம் பன்சியகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பொல்கஹஎல பிரதேசத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பகுதியில் நேற்று முன் தினம் இரவு முன்னெடுத்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

64 வயதான மகுல்பொத பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைதானதாக பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை பன்சியகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# இலங்கையை பெற்றோலிய மையமாக மாற்றத் திட்டம்!

## திருகோணமலைக்கு விரையும் தூது குழு

கொழும்பு, ஜன. 13

தெற்காசிய பிராந்தியத்தில் இலங்கையை ஒரு பெற்றோலிய மையமாக நிறுவுவதற்கான ஆரம்பப் பணிகளை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தொடங்கியுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல்கள் கடந்த வாரம் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (, சவுதி அரேபியா), குவைத் மற்றும் கட்டார் ஆகிய நாடுகளின் தூதர்களுடன் நடத்தப்பட்டதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜனக ராஜகருணா தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் உள்ள எண்ணெய் சேமிப்பு தொட்டிகளை மேம்படுத்துதல் மற்றும் திருகோணமலையில் புதிய எண்ணெய் சேமிப்பு தொட்டிகளை நிர்மாணித்தல் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

"இலங்கையின் புவியியல் இருப்பிடம் மற்றும் திருகோணமலை துறைமுகத்தின் நன்மைகளைக் கருத்தில் கொண்டு, பெற்றோலியப் பொருட்களை சுத்திகரித்து ஏற்றுமதி செய்வதற்கான பிராந்திய மையமாக இலங்கை மாற முடியும்" என்று ராஜகருணா தெரிவித்துள்ளார்.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடியுடன் திருகோணமலை எண்ணெய் சேமிப்பு தொட்டிகள் அமைந்துள்ள தளத்தை ஆய்வு செய்வதற்காக தூதர்கள் திருகோணமலைக்குச் செல்லவுள்ளனர்.

எண்ணெய் கப்பல்களை நிறுத்துவதற்காக கட்டப்படவுள்ள புதிய தளம் மற்றும் புதிய பெட்ரோலிய சுத்திகரிப்பு நிலையத்திற்கான தளத்தையும் தூதுக்குழு இதன் போது பார்வையிடும்.

கெரவலப்பிட்டியை தளமாகக் கொண்ட கொழும்பில் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு பங்கரிங் திட்டத்தைத் தொடங்க கட்டார் தூதர் ஒப்புக்கொண்டுள்ளார்.

நீண்ட கால ஒப்பந்தங்களுடன், எந்த இடைத்தரகர்களும் இல்லாமல் அரசாங்கத்திற்கு இடையிலான ஒப்பந்தங்களின் கீழ் எரிபொருளை வாங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் தூதர்களுடனான கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், சப்புகஸ்கந்தையில் மற்றொரு சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிக்கவும், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, திருகோணமலையில் பெற்றோலியத் துறை மேம்பாட்டுத் திட்டங்களில் இந்தியாவும் ஆர்வம் காட்டியுள்ளது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்திய எண்ணெய் நிறுவனம் இடையேயான கூட்டு முயற்சியான திருகோணமலை பெற்றோலியம் டெர்மினல் லிமிடெட் அமைப்பதற்கான ஆர்வ வெளிப்பாடுகள் கோரப்பட்டுள்ளன.

இந்த திட்டம் இந்தியாவுக்கு குத்தகைக்கு விடப்பட்ட திருகோணமலையில் உள்ள 61 எண்ணெய் தொட்டிகளை அடிப்படையாகக் கொண்டது.

இந்த கூட்டு முயற்சியின் 51 சதவீத பங்குகளை வைத்திருக்க இலங்கை ஆர்வம் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணை அறிக்கையை நடைமுறைப்படுத்த அநுர பின்னடிப்பது ஏன்?

## ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி

கொழும்பு, ஜன. 13

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் சம்பவம் குறித்து சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி விசாரணை அறிக்கை, பாராளுமன்ற தெரிவுக்குழு அறிக்கை ஆகியவற்றின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் ஜனாதிபதி ஏன் பின்வாங்குகிறார். கடந்த அரசாங்கங்களை போன்று இந்த அரசாங்கமும் குண்டுத்தாக்குதல் விவகாரத்தை தமது அரசியல் வெற்றிக்காக பயன்படுத்திக் கொள்ளக்கூடாது என்பதை வலியுறுத்துகிறோம். நீதியை பெற்றுக்கொள்ள தொடர்ந்து போராடுவோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கம், சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் வினவியபோது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் சம்பவம் இடம்பெற்று ஐந்தாண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையிலும், இதுவரை நீதி கிடைக்கவில்லை. குண்டுத் தாக்குதலின் உண்மைத்தன்மை வெளிப்படுத்தப்படவில்லை.

ஆட்சிக்கு வந்து 3 மாத காலத்தில் உண்மைச் சூத்திரதாரியை பகிரங்கப்படுத்துவதாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய வாக்குறுதியளித்தார். ஆனால் அவர் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றவில்லை.

ஜனாதிபதி அநுரகுமாரவும் குண்டுத்தாக்குதல்கள் பற்றி பல்வேறு வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கியுள்ளார். தனது ஆட்சியில் உண்மையை பகிரங்கப்படுத்தி குற்றவாளிகளுக்கு தண்டனையளிப்பதாக குறிப்பிட்டுள்ளார். ஆகவே இந்த அரசாங்கத்திலாவது நீதி கிடைக்குமா என்பதை எதிர்பார்த்துள்ளோம்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு மற்றும் பாராளுமன்ற தெரிவுக் குழு ஆகிய அறிக்கை சமர்ப்பித்துள்ளன.

இந்த அறிக்கையின் பரிந்துரைகளை முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டாபய ராஜபக்ஷ,ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் செயற்படுத்தவில்லை.

அறிக்கையின் பரிந்துரைகளை செயற்படுத்தினால் தனக்கு இணக்கமானவர்கள் நெருக்கடிக்குள்ளாகுவார்கள் என்று முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய குறிப்பிட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு அவதானம் செலுத்தினாரே தவிர இவ்விடயத்தில் கரிசனை கொள்ளவில்லை.

தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு இந்த பிரச்னைகள் ஏதும் கிடையாது. ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு மற்றும் பாராளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கை ஆகியவற்றின் பரிந்துரைகளை தாராளமாக நடைமுறைப்படுத்தலாம். இருப்பினும் அரசாங்கம் அது குறித்து கவனம் கொள்ளவில்லை-என்றார். (அ)

# பரீட்சை வினாத்தாள் கசிவு விசாரணைக்கு விசேட குழு

கொழும்பு, ஜன. 13

வடமத்திய மாகாணத்தில் 11 ஆம் வகுப்பு தவணை பரீட்சை வினாத்தாள்கள் மூன்று, தேர்வுக்கு முன்னதாகவே கசிந்ததாகக் கூறப்படும் சம்பவம் குறித்து விசாரிக்க குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

மாகாண கல்விச் செயலாளரின் உத்தரவின் பேரில், சம்பந்தப்பட்ட குழு 5 உறுப்பினர்களைக் கொண்டதாக மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பாக சிறப்பு தணிக்கையை தொடங்க மாகாண கல்வி செயலாளர் சிறிமேவன் தர்மசேன அறிவுறுத்தியுள்ளார்.

இதற்கிடையில், தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வடமத்திய மாகாண தரம் 11 பரீட்சையை எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் மீண்டும் நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு தற்போது அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதுவரை கிடைத்த தகவல்களின் படி, தவணைப் பரீட்சைக்கான சிங்கள இலக்கியம், அறிவியல் மற்றும் ஆங்கில வினாத்தாள்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் குறித்து பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவும் விசாரணை நடத்தி வருகிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடக சுதந்திரத்துக்கு புதிய தருணம் பழிவாங்கலுக்கு இடமளிக்கமுடியாது

## நளிந்த ஜயதிஸ்ஸ சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 13

**இலங்கையில் ஊடகவியலாளர்கள், ஆட்சியாளர்களின் பழிவாங்கல்கள் மற்றும் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகிய இருண்ட காலத்தை போல மீண்டும் உருவாக இடமளிக்கப் போவதில்லை என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ உறுதியுடன் தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்-ஊடக சுதந்திரத்தைப் பேணும் அரசின் வலுவான அங்கீகாரம், ஜனநாயகத்தின் அடிப்படை மற்றும் நாட்டின் முன்னேற்றத்துக்கு மிக முக்கியமானதாக கருதப்படுகிறது.

இது ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பை உறுதி செய்வதோடு மட்டுமல்லாமல், கருத்து வெளியீடு மற்றும் தகவல் அறியும் உரிமைகளைப் பாதுகாக்கும் உறுதியான பிரகடனமாகவும் செயல்பட வேண்டும் எனவும், கடந்த காலங்களில் ஏற்பட்ட துயர அனுபவங்களை மீண்டும் சந்திக்காதவாறு, ஊடக சுதந்திரத்துக்கான இடைஞ்சல் கள் மற்றும் ஆபத்துக்களை முற்றிலும் ஒழிக்கும் நிலையை உருவாக்க அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்-என்றார். (அ)

# ரத்கிந்த நீர்த்தேக்கத்தின் 4 வான் கதவுகள் திறப்பு

கொழும்பு, ஜன. 13

நாட்டின் சில பகுதிகளில் தொடர்ச்சியாக பெய்து வரும் கனமழை காரணமாக, உல்ஹிட்டிய ரத்கிந்த நீர்த்தேக்கத்தின் நான்கு வான்கதவுகளும் நேற்றுக் காலை திறக்கப்பட்டன என்று பொறுப்பதிகாரி தீப்தா ஜயசேகர தெரிவித்தார்.

நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் ஆபத்தான அளவை மீறியதால், அதன் ஒழுங்குமுறையான பராமரிப்புக்காக பொறியியலாளர் வழங்கிய ஆலோசனைக்கு இணங்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இதனைத்தொடர்ந்து, அடுத்த சில மணித்தியாலங்களில் பெய்யும் மழையின் தீவிரம் மற்றும் நீர்வரத்து நிலையை பொறுத்து வான்கதவுகள் திறக்கப்படும் முறைமை மாறக்கூடும் என்று தீப்தா ஜயசேகர குறிப்பிட்டார்.

இதன் விளைவாக, அருகிலுள்ள பகுதிகளில் நீர்வரத்து அதிகரிக்க வாய்ப்பு உள்ளதனால், அருகிலுள்ள குடியிருப்புக்கள் மற்றும் விவசாய நிலங்களில் உள்ள பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

பொதுமக்கள் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, குறித்த பிரதேசங்களில் உள்ள இடப்பெயர்வு முகாம்கள், நீர்ப்பாசனத் துறை மற்றும் அவசர சேவைகள் தயார்நிலையில் உள்ளன. தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பொதுமக்கள் உடனடியாக மேற்கொள்ளுமாறு அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

# சவூதி- இலங்கை இடையே 9 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

கொழும்பு, ஜன. 13

சவூதிக்கும் இலங்கைக்கும் இடையில் பல துறைகளை சார்ந்த 9 புரிந்துணர்வு ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடுவது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை நிர்மாணிக்கப்பட்டு பல ஆண்டுகளாக மக்களுக்கு வழங்கப்படாமல் இருக்கும் 500 சவூதி வீட்டுத் திட்டத்தைக் கூடிய விரைவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கி வைக்குமாறு இலங்கைக்கான சவூதி தூதுவர் காலித் ஹமூத் நாசர் அல்தாசம் அல்கஹ்தானி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைக்கான சவூதி தூதுவர் காலித் ஹமூத் நாசர் அல்தாசம் அல்கஹ்தானி வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேராத்தை சந்தித்து கலந்துரையாடியபோதே மேற்குறிப்பிட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் சவூதி வீட்டுத் திட்டம் குறித்து பேசப்பட்டது.

சுனாமி பேரழிவில் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்த மக்களுக்கு சவூதி அரசாங்கம் ஆயிரம் வீட்டுத்திட்டத்தை ஆரம்பித்து, அதன் முதல் கட்டமாக 500 வீடுகளும் பாடசாலை, பஸ் தரிப்பிடம் மற்றும் விளையாட்டு மைதானம் என பூரண வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு பணிகள் முடிவடைந்து பல ஆண்டுகளை கடந்துள்ளன. ஆனால், இதுவரை அந்த வீடுகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட வில்லை.

இறுதியில் நீதிமன்றம் குறித்த வீடுகளை இன விகிதாசார அடிப்படையில் வழங்குமாறும் அதன் பிரகாரம் 70 வீதம் முஸ்லிம்களுக்கும் ஏனையவர்களுக்கு 30 வீதமும் வழங்குமாறு தீர்ப்பளித்திருந்தது. எனவே இந்த வீடுகளை கால தாமதமின்றி மக்களுக்கு வழங்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது.

மேலும் சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு, துறைசார் நிபுணத்துவம் கொண்ட பணியாளர்களை சவூதிக்கு உள்வாங்குதல் மற்றும் இருதரப்பு தொழில்துறை வளர்ச்சி போன்ற விடயங்கள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இதன் அடிப்படையில் சவூதிக்கும் இலங்கைக்கும் இடையில் 9 புரிந்துணர்வு ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடுவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நல்லிணக்க செயன்முறையைத் தயாரிக்க விசேட குழுவொன்றை நியமிக்க உத்தேசம்

கொழும்பு, ஜன. 13

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில், அதற்கு முன்பதாக நல்லிணக்கச் செயன்முறை தொடர்பான வேலைத் திட்டத்தைத் தயாரிப்பதற்கென விசேட குழுவொன்றை நியமித்து, அதுபற்றி ஜெனிவாவுக்கு அறிக்கையொன்றை அனுப்பிவைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுவருவதாக உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி ஆரம்பமாகி, ஏப்ரல் 4 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. கடந்த செப்டெம்பர் மாதம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 57 ஆவது கூட்டத்தொடர் நடைபெற்ற வேளையிலேயே இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

அதனையடுத்து இலங்கை தொடர்பில் மனித உரிமைகள் பேரவையில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட "இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்" எனும் தலைப்பிலான தீர்மானம் வாக்கெடுப்பின்றி மேலும் ஒரு வருட காலத்துக்குக் காலநீடிப்பு செய்யப்பட்டது.

அவ்வாறு ஒரு வருடத்துக்குக் காலநீடிப்பு செய்யப்பட்ட தீர்மானம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 60 கூட்டத்தொடருடன் முடிவுக்கு வருகிறது.

இவ்வாறானதொரு பின்னணியில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஆரம்பமாகவிருக்கும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 58 ஆவது கூட்டத் தொடருக்கு முன்பதாக, தாம் முன்னெடுக்கவிருக்கும் நல்லிணக்க செயன்முறை தொடர்பான வேலைத்திட்டத்தைத் தயாரிப்பதற்கென அரசாங்கம் விசேட குழுவொன்றை நியமிக்கவிருப்பதாகவும், அக்குழுவினால் தயாரிக்கப்படும் வேலைத்திட்டத்தை உள்ளடக்கியதாக ஜெனிவாவுக்கு அறிக்கையொன்றை அனுப்பிவைப்பதற்கு உத்தேசித்திருப்பதாகவும் உள்ளக வட்டாரங்கள் மூலம் அறியமுடிகின்றது. (அ)

# மனநல பிரச்னைக்கு தீர்வு கோரி 78,000 தொலைபேசி அழைப்புகள்

கொழும்பு, ஜன. 13

மனநலப் பிரச்னைகளுக்கான தீர்வுகளைக் கோரி, கடந்த ஆண்டு தேசிய மனநல நிறுவனத்திற்கு சுமார் 78 ஆயிரம் தொலைபேசி அழைப்புகள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீட்டு வன்முறை, இணையக் குற்றம், பாலியல் துன்புறுத்தல், போதைப்பொருள் தொடர்பான பிரச்னைகள், மருந்து தொடர்பான பிரச்னைகள், பாலினம் தொடர்பான பிரச்னைகள் மற்றும் கல்வி தொடர்பான பிரச்னைகள் ஆகியவற்றுக்கு தீர்வுகளைக் கோரி இவ்வாறு அழைப்புகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சுமார் 26 ஆயிரம் நபர்களின் பிரச்னைகளுக்கு தீர்வுகளை வழங்க பணியாற்றியுள்ளதாக தேசிய மனநல நிறுவனத்தின் சிறப்பு மனநல மருத்துவர் புஷ்பா ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இணையம் மூலம் ஏற்படும் அழுத்தங்களால் மனநலப் பிரச்னைகளை எதிர்கொள்ள வேண்டிய ஏராளமான மக்கள், அந்தப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண தேசிய மனநல நிறுவனத்தின் 1926 ஹொட்லைனையும் தொடர்பு கொண்டுள்ளனர் எனவும் அவர் கூறினார். (அ)

# துமிந்த சில்வா கொழும்பு தேசிய வைத்தியசாலையில்!

கொழும்பு, ஜன. 13

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா திடீர் சுகவீனம் காரணமாக வெலிக்கடைச் சிறைச்சாலை மருத்துவமனையில் இருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் மூத்த அதிகாரி ஒருவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

துமிந்த சில்வா நேற்று முன் தினம் இரவு சுகவீனம் காரணமாக வெலிக்கடை சிறைச்சாலை மருத்துவமனையில் மீண்டும் அனுமதிக்கப்பட்டதாகவும், பின்னர் அவரது உடல்நிலை மோசமடைந்ததால் கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டதாகவும் அந்த அதிகாரி மேலும் கூறினார்.

பல மாதங்களாக வெலிக்கடை சிறைச்சாலை மருத்துவமனையில் இருந்த துமிந்த சில்வாவை, மருத்துவக் குழுவின் பரிந்துரைகளைத் தொடர்ந்து நேற்று முன் தினம் காலை சிறைச்சாலையின் பொதுப் பிரிவுக்கு மாற்ற சிறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர்.

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர கொலை வழக்கில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# துப்பாக்கிகளை மீள ஒப்படைக்க வழங்கப்பட்ட கால அவகாசம் எவ்விதத்திலும் நீட்டிக்கப்படாது

கொழும்பு, ஜன. 13

தனிநபர்களுக்கு தற்காப்புக்காக வழங்கப்பட்டுள்ள துப்பாக்கிகளை மீள ஒப்படைப்பதற்காக வழங்கப்பட்ட கால அவகாசம் எந்தவிதத்திலும் நீட்டிக்கப்படாது என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, தற்போது தனிப்பட்ட பாதுகாப்புக்காக பொலிஸ் மற்றும் இராணுவத்தினரிமிருந்து அனுமதிப்பத்திரத்துடன் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள அனைத்து துப்பாக்கிகளையும் ஜனவரி 20ஆம் திகதிக்கு முன்னதாக ஒப்படைக்குமாறு பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறு துப்பாக்கிகளை ஒப்படைக்காமல் தம்வசம் வைத்திருக்கும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட துப்பாக்கிகளை திருப்பி அனுப்புவதற்கான கால அவகாசம் கடந்த டிசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்திருந்தது.

எனினும், போர் இடம்பெற்ற காலத்தின்போது பொலிஸ் மற்றும் இராணுவத்தால் வழங்கப்பட்ட துப்பாக்கிகளை மீள ஒப்படைப்பதற்கான கால அவகாசம் ஜனவரி 20 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள கட்டியெழுப்பினால் ஐ.தே.க. நிச்சயம் வெற்றி பெறமுடியும்!

## தலதா அத்துக்கோரள கருத்து

கொழும்பு, ஜன. 13

**ஐ.தே.க.வை மீளக் கட்டியெழுப்பினால் நிச்சயம் வெற்றி பெற முடியும் என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் தலதா அத்துக்கோரள தெரிவித்தார்.கொழும்பு - பிளவர் வீதியில் தொகுதி அமைப்பாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் குறிப்பிடுகையில்-ஐக்கிய தேசிய கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி இணைவு குறித்து 2020 செப்ரெம்பர் மாதத்திலிருந்தே நாம் கலந்துரை யாடியிருக்கின்றோம்.

அப்போது நான் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினராக கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து இந்த கோரிக்கையை முன்வைத்திருந்தேன். பின்னர் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் கபீர் ஹசீம் ஆகியோரை அழைத்து வந்து கலந்துரையாடியிருக்கின்றேன்.

இன்று இவ்விரு கட்சிகளுக்கும் ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் அன்றே நாம் உணர்ந்தோம். இந்த அபாயத்தை உணர்ந்ததன் காரணமாகவே இணைந்து பயணிக்க வேண்டும் என்பதை ஆரம்பத்திலிருந்தே வலியுறுத்தினோம்.

அன்று ஐக்கிய மக்கள் சக்தி வெற்றி பெற்றிருந்ததால் தான் நாம் இவ்வாறான கோரிக்கையை முன்வைப்பதாக பெரும்பாலானோர் குறிப்பிட்டனர். ஆனால் இன்று என்னவாகியிருக்கிறது?

கட்சிகள் இரண்டாக இருந்தாலும் ஐக்கிய தேசிய கட்சியினரே இரு தரப்பிலும் இருக்கின்றனர். இதற்காக நானும் பிரதித் தலைவரும் அர்ப்பணிப்புடன் முயற்சித்து வருகின்றோம்.

அதற்கமைய பேச்சுவார்த்தைகளையும் ஆரம்பித்திருக்கின்றோம். எவ்வாறிருப்பினும் எம்மால் இதனை தனித்து செய்ய முடியாது. கீழ் மட்டத்திலிருந்து சகலரும் இதற்கு ஒத்துழைக்கவேண்டும்.

யானைச் சின்னத்தில் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர் ஜீவன் தொண்டமான் வெற்றி பெற்றிருக்கின்றார். அவராகவே கோரிக்கையை முன்வைத்து யானைச் சின்னத்தில் போட்டியிட்டார். எனவே இதனை மீளக் கட்டியெழுப்பினால் நிச்சயம் எம்மால் வெற்றி பெற முடியும். இது யதார்த்தமாகும். ஐ.தே.க.வின் பிளவில் நானும் தவறிழைத்தவளாகவே உணர்கின்றேன். அன்று அனைவரும் இணைந்து எடுத்த தீர்மானத்துக்கு நாம் இணக்கம் தெரிவித்தோம்-என்றார். (அ)

# சுற்றுலா பயணிகளின் கவனத்தை ஈர்த்த இலங்கை தெற்கு கடற்கரை!

கொழும்பு, ஜன. 13

உலகப் புகழ்பெற்ற வோக் பத்திரிகை,உலகின் மிகச் சிறந்த குளிர்கால சுற்றுலா தளமாக இலங்கையின் தெற்கு கடற்கரையை பெயரிட்டுள்ளது.

கடலோரப் பகுதியின் இயற்கை அழகு மற்றும் கலாச்சார கூறுகளுக்கு மேலதிகமாக, சுற்றுலாப் பயணிகளுக்கு பல்வேறு அனுபவங்களை பெற்றுத்தர கூடிய வகையில் அமைந்துள்ளதாக அந்தப் பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

அழகிய கடற்கரைகள், வனவிலங்குகள் மற்றும் தேயிலைத் தோட்டங்கள் போன்ற சுற்றுலா தலங்கள் காரணமாக, உலகெங்கிலும் உள்ள சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை இலங்கை ஈர்த்துள்ளதாக வோக் பத்திரிகை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# கேரள கஞ்சாவுடன் ஒன்பது பேர் கைது!

கொழும்பு, ஜன. 13

புத்தளம்- கற்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கப்பல் அடிய பிரதேசத்தில், கேரள கஞ்சா வைத்திருந்த 09 சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கற்பிட்டி பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், 27 தொடக்கம் 50 வயதுக்குட்பட்ட தலவில பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

சந்தேக நபர்களிடம் இருந்து 09 கிலோகிராம் 200 கிராம் கேரள கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கற்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்துகொள்ள வாருங்கள்!

## முன்னாள் ஜனாதிபதி ரணில் அழைப்பு

கொழும்பு, ஜன. 13

ஐக்கிய தேசிய கட்சி தலைமையில் யானை சின்னத்தில் ஐக்கிய தேசிய முன்னணியை அமைக்குமாறு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

உண்மையில் இது சிறந்தவொரு யோசனையாகும். ஐக்கிய மக்கள் சக்தி மாத்திரமின்றி எந்தவொரு கட்சிக்கும் இந்த முன்னணியில் இணைவதற்கு அழைப்பு விடுப்பதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கடுவலை தொகுதி அமைப்பாளர் சிலர் ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்து கொண்டனர். இதன்போது கட்சித் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க, ஐ.தே.க. பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன, பொதுச் செயலாளர் தலதா அத்துக்கோரள, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ராஜித சேனாரத்ன மற்றும் சாகல ரத்நாயக்க ஆகியோருக்கும் தொகுதி அமைப்பாளர்களுக்குமிடையில் கொழும்பு - பிளவர் வீதியில் அமைந்துள்ள புதிய ஜனநாயக முன்னணி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன் போது கருத்து வெளியிட்ட போதே முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-1991ஆம் ஆண்டு குற்றப் பிரேரணை ஊடாக ஐக்கிய தேசிய கட்சி இரண்டாகப் பிளவடையவிருந்தது. அன்று முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ கட்சியைப் பாதுகாத்து என்னிடம் ஒப்படைத்தார்.

அதன் பின்னர் பொறுப்புக்களை நான் ஏற்றுக்கொண்டேன். தற்போது தலதா அத்துகோரளவிடம் அந்த பொறுப்புக்களை ஒப்படைத்திருக்கின்றேன். அவர் சகல தரப்பினருடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து தனது பணிகளை ஆரம்பித்திருக்கின்றார்.

இங்கு நீங்கள் அனைவரும் வருகை தந்துள்ளமையை ஐக்கிய மக்கள் சக்தியின் தோல்வியாகவோ ஐக்கிய தேசிய கட்சியின் மாபெரும் வெற்றியாகவோ கருதக்கூடாது.

ஐக்கிய தேசிய முன்னணியின் உருவாக்குவதென்றால் அதில் அனைத்து கட்சிகளும் உள்ளடக்கப்பட வேண்டும். தற்போது எமது பிரதான இலக்கு யானையை பலப்படுத்துவதாகவே இருக்கவேண்டும்.

எனவே எமக்குள் யாருடைய வெற்றி அல்லது யாருடைய தோல்வி என்ற பேதங்களும் கருத்து முரண்பாடுகளும் இருக்கக்கூடாது.

ஐக்கிய தேசிய முன்னணியில் இணைவதற்கு கடந்த அரசாங்கத்தில் எமக்கு ஒத்துழைப்பு வழங்கிய சகலருக்கும் அழைப்பு விடுக்கின்றோம்.

அதன் பின்னர் இந்த முன்னணியின் பாதுகாத்துச் செல்லவேண்டியது உங்கள் அனைவரதும் பொறுப்பாகும். ஆனால் யார் இணைந்தாலும் யானை சின்னத்திலேயே போட்டியிடுவோம்- என்றார். (அ)

# மோட்டார் சைக்கிள்கள் திருடியவர் ஐஸ் போதைப்பொருளுடன் கைது !

கொழும்பு, ஜன. 13

களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பன்விலஹேனவத்த பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைதான சந்தேக நபரிடமிருந்து 1.750 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை வலய குற்றத் தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய முன்னெடுத்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் 28 வயதுடைய காலி பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பது தெரியவந்துள்ளது.

சந்தேக நபரிடம் முன்னெடுக்கப்பட்ட மேலதிக விசாரணையில், இவர் பல்வேறு மோட்டார் சைக்கிள் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையமை தெரியவந்துள்ளது. குறித்த சந்தேக நபர் மோட்டார் சைக்கிள்களை திருடி குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கும் போதைப்பொருள் வர்த்தகர்களுக்கும் வழங்கி வந்துள்ளார்.

அதன்படி காலி, பேருவளை மற்றும் பொத்தல ஆகிய பொலிஸ் பிரிவுகளில் திருடப்பட்ட 5 மோட்டார் சைக்கிள்களையும் பொலிஸார் இதன் போது கைப்பற்றியுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களுத்துறை தெற்கு பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# மண் சரிவு காரணமாக ரயில் சேவைகள் தடை

கொழும்பு, ஜன. 13

நிலவும் காலநிலை காரணமாக ஒஹியா மற்றும் இடல்கசின்ன ரயில் நிலையங்களுக்கு இடையில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதால் ரயில் சேவைகள் தடைப்பட்டன.

ரயில்வே திணைக்களம் இடிபாடுகளை அகற்ற ஊழியர்களை நியமித்துள்ளது. மேலும் விரைவாக வழக்கமான ரயில் இயக்கங்களை மீட்டெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு தெரிவித்தது. (அ)

# நெல் கொள்வனவு செய்யும் ஆலை உரிமையாளர்கள் பதிவு கட்டாயம்!

கொழும்பு, ஜன. 13

பெரும்போக காலத்தில் நெல் வாங்கும் அனைத்து ஆலை உரிமையாளர்கள் மற்றும் களஞ்சியசாலை உரிமையாளர்களும் அரசாங்க நெல் சந்தைப்படுத்தல் சபையில் பதிவு செய்வது கட்டாயம் என்று வர்த்தகம், வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் ஆர்.எம். ஜயவர்தன தெரிவித்தார்.

பெற்றுக்கொள்ளும் நெல் தொடர்பாக ஒரு தரவுத்தள அமைப்பை உருவாக்குவதும், நெல் இருப்புகளை மறைக்க முடியாத ஒரு திட்டத்தை உருவாக்குவதும் இதன் நோக்கம் என்று பிரதி அமைச்சர் குறிப்பிட்டார்.

தட்டுப்பாடு இல்லாமல் அரிசி வழங்கும் நோக்கில் அரசு நெல் கொள்முதல் திட்டத்தை செயல்படுத்தி வருவதாகவும் பிரதி அமைச்சர் மேலும் கூறினார்.

நெல் மற்றும் அரிசிக்கான உத்தரவாத விலையை ஒரே நேரத்தில் தீர்மானித்து வர்த்தமானியில் வெளியிட அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும் பிரதி அமைச்சர் தெரிவித்தார். (அ)

# தென்கொரியாவில் தொழில் தருவதாக கூறி ஏமாற்றி பணம் மோசடி செய்த பெண் கைது!

கொழும்பு, ஜன. 13

தென் கொரியாவில் ஈ 8 விஸா பிரிவின் கீழ் தொழில் வாங்கித் தருவதாகக் கூறி மக்களை ஏமாற்றியதற்காக ஒரு பெண் கைது செய்யப்பட்டார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்கு கிடைத்த 5 முறைப்பாடுகளின் அடிப்படையில், பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் மேற்படி அனுமதிப்பத்திரம் பெறாத வேலைவாய்ப்பு நிறுவனத்தை சுற்றி வளைத்து சந்தேக நபரான பெண்ணை கைது செய்தனர்.

தென் கொரியாவில் ஈ 8 விஸா பிரிவில் வேலைவாய்ப்பு வழங்குவதாக உறுதியளித்து, ஒருவரிடமிருந்து கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் ரூபா வரையில் பெற்றிருப்பது தெரியவந்துள்ளது.அதன்படி, முறைப்பாட்டா ளர்களிடம் இருந்து சுமார் 1.3 மில்லியன் ரூபா வரையில் மோசடி செய்துள்ளதாக தெரியவந்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை வீரநகர் கரையோரம் கடலுக்குள் உள்வாங்கப்படும் அபாயம்!

திருகோணமலை, ஜன.13

திருகோணமலை - வீரநகர் கரையோரப் பகுதியில் உள்ள மக்களின் குடியிருப்புகள் திடீரென கடலுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளதால் அப்பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர்.




கடந்த சில நாட்களாக கடலரிப்பு காரணமாக அப்பகுதி கடலுக்குள் உள்வாங்கப்பட்டு வருவதாகவும் இவ்வாறான காட்சியை தம் வாழ்வில் முதல் முறை காண்பதாகவும் அப்பகுதி மக்கள் கூறினர்.

கடலரிப்பினால் கடற்கரையை அண்டி காணப்படும் சில வீடுகளின் மதில்கள், அத்திபாரம், சுவர்கள் இடிந்து வீழ்ந்துள்ளன.

இக்கடற்பகுதியில் பாரிய இரும்புப் பின்னல் தொகுதியொன்று கரையின் நீளமான பகுதிக்கு வெளிவருவதாகவும் இது என்ன என்பது தொடர்பில் அறிய முடியாதுள்ளதாகவும் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

கடலரிப்பில் இருந்து தம்மை பாதுகாப்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் அவசர கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# அலங்காரப் பானை விற்பனை



திருகோணமலை, ஜன.13

"தை பிறந்தால் வழிபிறக்கும்" என்றதன் அடிப்படையில் தமிழர்களின் வாழ்வியலும், பாரம்பரியமும் ஒன்றித்து கொண்டாடும் விழாவாக தைப் பொங்கல் விழா மிகவும் சிறப்பாக கொண்டாடப்படுகின்றது.

இந்த நிலையில், திருகோணமலையில் இளைஞன் ஒருவரின் முயற்சியில் அலங்காரப் பானைகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. (எ- 04)

# பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கல்



நற்பிட்டிமுனை, ஜன.13

நற்பிட்டிமுனை அல் கரீம் பௌண்டேஷன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.


நற்பிட்டிமுனை பிரதேசத்திலுள்ள சுமார் ஐம்பது மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் இந்த நிகழ்வில் நிறுவனத்தின் தவிசாளரும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமைப்பின் கிழக்கு மாகாண சட்டப் பணிப்பாளருமான சட்டத்தரணி சீ. எம். ஹலீம் பிரதம விருந்தினராகவும் பொதுச் செயலாளர் யூ.எல். எம். பாயீஸ் விசேட விருந்தினராகவும் கலந்து கொண் டார். (எ)

# இறக்காமம் மருத்துவமனையின் அபிவிருத்தி தொடர்பில் ஆராய்வு

கல்முனை, ஜன.13

இறக்காமம் பிரதேச மருத்துவமனையின் அபிவிருத்தி தொடர்பான கூட்டமொன்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் இடம் பெற்றது.

இந்தக் கூட்டத்தில் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம். சீ. எம்.மாஹிர், இறக்காமம் மருத்துவமனை யின் பொறுப்பதிகாரி ஜெசிந்தன் உள்ளிட்ட மருத்துவர்கள், மருத்துவமனையின் அபிவிருத்தி குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



மருத்துவமனையின் விடுதிகள் உள்ளிட்ட சில பிரிவுகளுக்கும் சென்று பார்வையிட்ட பணிப்பாளர், மருத்துவமனையின் தற்போதைய தேவைகள் மற்றும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண் டார்.

இதன்போது, மருத்துவமனையின் பொறுப்பதிகாரி மற்றும் மருத்துவமனை அபிவிருத்திக் குழுவால் முன்வைக்கப்பட்ட பல்வேறு பிரச்னைகளுக்கும் தீர்வு காணப்பட்டதுடன் அத்தியாவசிய தேவைகளை உடன் நிவர்த்தி செய்து தருவதாகவும் பணிப்பாளர் உறுதியளித்தார். (எ)

# பொலிஸ் அதிகாரி கௌரவிப்பு



சாய்ந்தமருது, ஜன.13

பொலிஸ் சேவையில் இணைந்து சுமார் 37 வருடங்களாக நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் பணியாற்றி பல பதவி உயர்வுகளை பெற்று இறுதியாக கல்முனை பொலிஸ் நிலைய பதில் தலைமை பொலிஸ் பரிசோதகராக பணியாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் மீரா லெப்பை றபீக்கை கௌரவிக்கும் நிகழ்வு சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன் தலைமையில் அல் ஹிலால் வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். (எ)

# சுகாதார பிரிவுகளின் சேவையை மேம்படுத்த மருத்துவ உபகரணம்

கல்முனை, ஜன.13

கல்முனை பிராந்திய மருத்துவமனைகள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள், பாடசாலைகள் ஆகியவற்றின் வாய் சுகாதார பிரிவுகளின் சேவையை மேம்படுத்தும் பொருட்டு, குறித்த பிரிவுகளுக்கு பற்சிகிச்சை மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டன.

குறித்த உபகரணங்களை கையளிக்கும் நிகழ்வு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் நடைபெற்றது.



இதன்போது மருதமுனை, அட்டாளைச்சேனை, இறக்காமம், அன்னமலை, ஒலுவில் ஆகிய பிரதேச மருத்துவமனை களின் வாய் சுகாதார பிரிவுக ளுக்கும், பொத்துவில் சுகாதார வைத் திய அதிகாரி அலுவலகம் மற் றும் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி, கல்முனை ஸாஹிரா கல்லூரி என்பவற்றின் பற்சி கிச்சை நிலையங்களுக்கும் குறித்த மருத்துவ உபகரணங் கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிராந்திய வாய் சுகாதார பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி யூ. ஹபீப் முஹம்மட் உள்ளிட்ட பிரிவு தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர். (எ)



காரைதீவு சிறீமன் நாராயணன் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்ற சுவர்க்கவாயிலேகாதசி விரத பூஜைகள் மற்றும் திருப்பாவை பூசை தீர்த்தோற்சவத்தின் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுக்கடங்காத காட்டுத் தீ இதுவரை 13 பேர் உயிரிழப்பு

## தொடரும் பேரழிவு, 22 000 ஏக்கர் எரிந்து நாசம்

லொஸ் ஏஞ்சல்ஸ், ஜன.13

**லொஸ் ஏஞ்சல்ஸில் கட்டுக்கடங்காத காட்டுத் தீயால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 13 ஆக அதிகரித்தது. தொடர்ந்து தீ பரவி வருவதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.**



பலர் பலத்த தீக்காயம டைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரம் அமைந்துள்ளது.

கடந்த 7ஆம் திகதி லொஸ் ஏஞ்சல்ஸின் பாலிசேட்ஸ் பகுதியில் காட்டுத் தீ ஏற்பட்டது. மலைப்பகுதிகள், எளிதில் தீப் பற்றி எரியும் பைன் மரங்களால் காட்டுத் தீ அதிவேகமாக பரவியது. தற்போது பாலிசேட்ஸ், ஈட்டன், ஹர்ஸ்ட், லிடியா ஆகிய பகுதிகளில் கட்டுக்கடங்காமல் தீ பரவி வருகிறது.

கடந்த எட்டு மாதங்களுக்கும் மேலாக மழை இல்லாத காரணத்தால் வறண்டு கிடந்த பகுதிகளில் பற்றிய தீ, தற்போது காட்டுத் தீயாக மாறி வருகிறது. லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் சுமார் ஒரு கோடி பேர் வசிக்கின்றனர். இதில் காட்டுத் தீ பரவும் பகுதிகளில் இருந்து சுமார் 4 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் வெளியேற்றப் பட்டு உள்ளனர். 90இற்கும் மேற்பட்ட முறை மக்கள் வெளியேற வேண்டும் என எச்சரிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. நகரம் முழுவதும் ஆறு பகுதிகள் தீ விபத்துகளால் எரிந்து சேதமடைந்துள்ளன. மருத்துவமனைகள் எரிபொருள் நிரப்பு நிலையங்கள், உணவகங்கள் என அனைத்துப் பகுதியும் தீயில் கருகியுள்ளன.

மாலிபூ பகுதியில் மட்டும் 13 ஆயிரம் ஏக்கர் பரப்பளவுள்ள பகுதிகள் கருகின. தீயை அணைப்பதற்காக அமெரிக்கா கோடிக்கணக்கான ரூபாயை செலவழித்து வருகிறது. தீயணைப்புப் பணியில் கனடாவும் இணைந்துள்ளது.

லொஸ் ஏஞ்சல்ஸ் காட்டுத் தீயால் அமெரிக்காவுக்கு சுமார் ரூ.13 இலட்சம் கோடி வரை இழப்பு ஏற்படலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இதுவரை 22,000 ஏக்கர் பரப்பளவில் காட்டுத்தீ பரவியுள்ள நிலையில், தீயை கட்டுக்குள் கொண்டு வர தீயணைப்புத் துறை தீவிர முயற்சியை மேற்கொண்டு வருகிறது. (எ)

# மெட்டா கொள்கை மாற்றம் காலக்கெடு விதித்த பிரேசில்

பிரேசிலியா, ஜன.13

மெட்டா நிறுவனத்தின் சில கொள்கைகள் கைவிடப்படுவது பற்றி விளக்கமளிக்கும்படி கோரி, பிரேசில் அரசு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

பேஸ்புக், இன்ஸ்டாகிராம் மற்றும் வட்ஸ்அப் உள்ளிட்ட வலைத்தளங்களை இயக்கி வரும் சமூக ஊடகங்களில் ஒன்றான மெட்டா நிறுவனம் சமீபத்தில் அதன் கொள்கையில் சில மாற்றங்கள் பற்றிய விவரங்களை வெளியிட்டது. இது வரை மரபாக கடைப்பிடித்து வந்த உண்மை கண்டறியும் நடைமுறையில் இந்த மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இதன்படி, தகவல்களை சரிபார்க்கும் திட்ட கொள்கை கைவிடப்படும் என்ற முடிவு அறிவிக்கப்பட்டது. இதனால், அதன் தளங்களில் வெறுப்பு பேச்சு மற்றும் தவறான தகவல் பரிவர்த்தனை பற்றிய விடயங்களில் இதுவரை கடைப்பிடிக்கப்பட்ட மரபுகள் கைவிடப்படுகின்றன.

இந்தச் சூழலில், உண்மை கண்டறியும் நடைமுறையில் மரபாக கடைப்பிடிக்கப்பட்டு வந்த கொள்கைகள் கைவிடப்படுவது பற்றி விளக்கம் அளிக்கும்படி கோரி மெட்டா நிறுவனத்துக்கு பிரேசில் அரசு நோட்டீஸ் அனுப்பியுள்ளது. இதற்காக 72 மணிநேர காலக்கெடுவும் விதித்துள்ளது.

இதுபற்றிய அறிவிப்பில், குழந்தைகள் மற்றும் முதியவர்கள், ஆபத்து சூழலிலுள்ள பாதுகாப்பற்ற மக்கள் மற்றும் வணிக சூழலை பாதுகாக்க கடுமையான சட்ட நடைமுறையை பிரேசில் கொண்டுள்ளது. (எ)

# சிறுபான்மையின மக்கள்மீது அரசியல் ரீதியில் வன்முறை!

## மத ரீதியிலானவை அல்ல என்று பங்களாதேஷ் பொலிஸ் விளக்கம்

டாக்கா, ஜன.13

சிறுபான்மையின மக்களுக்கு எதிராக நிகழ்ந்த பெரும்பாலான வன்முறைச் சம்பவங்கள் அரசியல் ரீதியிலானவை என்றும், அவை மத ரீதியிலானவை அல்ல என்றும் பங்களாதேஷ் பொலிஸ் விளக்கமளித்து அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

பங்களாதேஷ் இந்து - பௌத்த ஒற்றுமை சபை செய்த முறைப்பாட்டின் பேரில் பொலிஸ்துறை ஓர் அறிக்கையை தாக்கல் செய்துள்ளது. அதில், "ஓகஸ்ட் 2024இல் மொத்தம் 1,769 வகுப்புவாத தாக்குதல்கள் நடந்ததாக இந்து பௌத்த ஒற்றுமை சபை தெரிவித்துள்ளது. ஆனால், பெரும்பாலான வழக்குகள் மத ரீதியிலானவை அல்ல அரசியல் ரீதியிலானவை.

பொலிஸ்துறை விசாரணையில் 1,234 சம்பவங்கள் அரசியல் ரீதியிலானவை. 20 சம்பவங்கள் மத ரீதியிலானவை.

குறைந்தது 161 குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்று கண்டறியப்பட்டது என்று விளக்கமளித்துள்ளது. (எ)

# வடகொரிய படையினர் உக்ரைனில் சிறைபிடிப்பு

## உலகத்துக்கு உண்மை தெரிய வேண்டும்

கீவ், ஜன.13

உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையே நீடித்துவரும் போரில் வடகொரியாவும் ஈடுபட்டு வருகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக சம்பவம் ஒன்று நடந்துள்ளது. வடகொரியா இராணுவத்தினர் இருவர் காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளனர்.

இதுபற்றி உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலன்ஸ்கி வெளியிட்ட எக்ஸ் சமூக ஊடக பதிவில், குர்ஸ்க் பகுதியில் வடகொரிய இராணுவத்தைச் சேர்ந்த இருவர் காயங்களுடன் மீட்கப்பட்டு கீவ் நகருக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என தெரிவித்துள்ளார்.

அவர்களை சிறை பிடித்ததற்காக சிறப்பு படையினர் மற்றும் துணை இராணுவத்தினருக்கு ஜெலன்ஸ்கி நன்றி தெரிவித்தார்.

அவர்களுக்கு மருத்துவ உதவி வழங்கப்பட்டு வருகிறது. உலகத்துக்கு உண்மை தெரிய வேண்டும் என்பதற்காக கைது செய்யப்பட்ட இருவரையும் சந்திப்பதற்கு பத்திரிகையாளர்களுக்கு அனுமதி வழங்கவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என்றும் ஜெலன்ஸ்கி கூறினார். (எ)

# போதைப்பொருள் ஒழிப்பு ஆரம்பம்

புதுடில்லி, ஜன.13

இந்தியா முழுவதும் பல இடங்களில் கைப்பற்றப்பட்ட ரூ. 2, 400 கோடி மதிப்பிலான போதைப்பொருட்களை அழிக்கும் நடவடிக்கையை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆரம்பித்து வைத்தார்.

போதைப்பொருள் கடத்தல் சம்பவம் நாடு முழுவதும் நடைபெறுகிறது. இது நாட்டின் பாதுகாப்பில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இப்பிரச்னைக்கு தீர்வு காண, போதைப் பொருள் கடத்தலை ஒழிக்கும் நடவடிக்கை குறித்து ஆராய 'போதைப் பொருள் கடத்தல் மற்றும் தேசிய பாதுகாப்பு' என்ற தலைப்பிலான கருத்தரங்கை, போதைப் பொருள் கட்டுப்பாட்டு பிரிவு டில்லியில் நடத்தியது. இந்த கருத்தரங்கை மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆரம்பித்து வைத்தார். (எ)

# பயங்கரவாதிகள் தாக்குதல் 21 படையினர் உயிரிழந்தனர்

அபுஜா, ஜன.13

நைஜீரியாவில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் அரசு ஆதரவு படையினர் 21 பேர் உயிரிழந்தனர்.

மேற்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள நாடு நைஜீரியா. இந்த நாட்டில் ஐ. எஸ். ஐ. எஸ்., அல்கொய்தா, போகோ ஹராம் போன்ற பயங்கரவாத அமைப்புகளும், பல்வேறு கிளர்ச்சி குழுக்களும் செயல்பட்டு வருகின்றன.

இதேபோன்று, கொள்ளை - கொலை, பணத்துக்காக பொதுமக்கள், குழந்தைகள், பாடசாலை மாணவர்கள், கால்நடைகளை கடத்தும் செயலில் ஈடுபடும் "பண்டிட்ஸ்" என்ற கும்பல்களும் செயல்பட்டு வருகின்றன. இந்த பண்டிட்ஸ் கடத்தல் கும்பலை நைஜீரியா பயங்கரவாத அமைப்பாக அறிவித்துள்ளது. இந்தக் குழுக்கள் பொதுமக்கள், பாதுகாப்புப் படையினரை குறிவைத்து அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்த நிலையில், நைஜீரியாவின் கட்சினா மாகாணத்தில் அரசு ஆதரவு படையினரை குறிவைத்து பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 21 பேர் உயிரிழந்தனர். மேலும், பலர் படுகாயமடைந்தனர். (எ)

# பல வாகனங்கள்மீது அடுத்தடுத்து மோதி விபத்துக்குள்ளான லொறி!

## பாகிஸ்தானில் 12 பேர் பலி

லாகூர், ஜன.13

பாகிஸ்தானில் வீதியில் சென்று கொண்டிருந்த வாகனங்கள் மீது லொறி ஒன்று அடுத்தடுத்து மோதி விபத்துக்குள்ளான சம்பவத்தில் 12 பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தான் கைபர் பக்துவா மாகாணம் கரக் - இந்தோஸ் நெடுஞ்சாலையில் லொறி ஒன்று சென்றுகொண்டிருந்தது. அமிரி சவுக் பகுதியில் சென்ற போது லொறியில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டது.

இதனால், சாரதியின் கட்டுப்பாட்டையிழந்த லொறி, வீதியில் சென்ற வாகனங்கள் மீது அடுத்தடுத்து மோதி விபத்துக்குள்ளானது. மேலும், வீதியோரம் நின்றுகொண்டிருந்தவர்கள் மீதும் மோதியது. இந்தக் கோர விபத்தில் 12 பேர் உயிரிழந்தனர். மேலும், 25 பேர் படுகாயமடைந்தனர். தகவலறிந்து விரைந்து வந்த பொலிஸார் படுகாயமடைந்தவர்களை மீட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர். (எ)

# பா. ஜ. க. பொய் குற்றச்சாட்டு

புதுடில்லி, ஜன.13

ஆம் ஆத்மி அரசின் மதுபான கொள்கையால் டில்லி அரசுக்கு ரூ. 2,026 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாக பா.ஜ.க. குற்றம் சாட்டியுள்ளது. ஆனால் இதனை ஆம் ஆத்மி கட்சி நிராகரித்துள்ளது.

இதுகுறித்து பா.ஜ.க. எம். பி. அனுராக் தாக்குர் செய்தியாளர்களிடம் கூறுகையில், "ஆம் ஆத்மி அரசின் மதுபான கொள்கையால் அரசு கருவூலத்துக்கு ரூ.2,026 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது"- என்றார்.

இதுகுறித்து ஆம் ஆத்மி செய்தித் தொடர்பாளர் பிரியங்கா காக்கர் கூறுகையில், "பா.ஜ.க. மீண்டும் அதே பழைய குற்றச்சாட்டை சுமத்துகிறது. சி.ஏ.ஜி. அறிக்கை என்று சில பக்கங்களை காட்டுகிறது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அபார பந்துவீச்சு 3ஆவது போட்டியில் வெற்றி

ஆக்லாந்து, ஜன.13


மூன்றாவது ஒருநாள் போட்டியில் அபாரமாக பந்துவீசிய இலங்கை அணி, நியூசிலாந்து அணியை வீழ்த்தி அசத்தல் வெற்றிபெற்றது.

இலங்கை கிரிக்கெட் அணி, நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடியது. இந்த நிலையில், இவ்விரு அணிகள் இடையிலான 3ஆவது போட்டி ஆக்லாந்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்களை இழந்து 290 ஓட்டங்கள் குவித்தது. அதிகபட்சமாக பதும் நிஸ்ஸங்க 66 ஓட்டங்களும், குசல் மெண்டிஸ் 54 ஓட்டங்களும், ஜனித் லியனகே 53 ஓட்டங்களும் அடித்தனர். நியூசிலாந்து தரப்பில் அதிகபட்சமாக மேன் ஹென்ரி 4 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதனையடுத்து 291 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய நியூசிலாந்து அணி இலங்கையின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் சீரான இடைவெளியில் விக்கெட்களை இழந்தது. அந்த அணியில் மார்க் சப்மேனை தவிர மற்ற வீரர்கள் யாரும் 20 ஓட்டங்களைக் கூட தொடவில்லை.

இந்த நிலையில், வெறும் 29. 4 ஓவர்கள் மட்டுமே



தாக்குப்பிடித்த நியூசிலாந்து 150 ஓட்டங்களில் சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. இதன் மூலம் 140 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அசத்தல் வெற்றி பெற்றது. அபாரமாக பந்துவீசிய தீக்ஷனா, அசித பெர்னாண்டோ மற்றும் எஷன் மலிங்கா ஆகியோர் தலா 3 விக்கெட்கள் வீழ்த்தினர். (எ)

# நியூசிலாந்து அணி வசமானது தொடர்

ஆக்லாந்து, ஜன.13

இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரை நியூசிலாந்து அணி 2 - 1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இலங்கை கிரிக்கெட் அணி, நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடியது. இதன் முதலாவது ஆட்டத்தில் 9 விக்கெட்கள் வித்தியாசத்திலும், 2ஆவது ஆட்டத்தில் 113 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் நியூசிலாந்து அணி வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது.

இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி ஆக்லாந்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில், 140 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணி வெற்றி பெற்றது.

இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2 - 1 என்ற கணக்கில் நியூசிலாந்து கைப்பற்றியது. (எ)




# ஆஸி ரென்னிஸ் தொடரில் 2ஆவது சுற்றில் கின்வென்

மெல்பேர்ன், ஜன.13

அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடரில் 2ஆவது சுற்றுக்கு சீனாவின் கின்வென் ஜெங் முன்னேறினார்.

ரென்னிஸில் ஆண்டுதோறும் அவுஸ்திரேலிய ஓபன், பிரெஞ்ச் ஓபன், விம்பிள்டன், அமெரிக்க ஓபன் என 4 வகையான கிராண்ட்ஸ்லாம் என்ற உயரிய அந்தஸ்து பெற்ற போட்டிகள் நடத்தப்படுகின்றன. இதன்படி, இந்த ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியான அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடர் மெல்பேர்னில் நேற்றுத் தொடங்கியது. இந்தத் தொடர் வரும் 26ஆம் திகதி வரை நடைபெறுகிறது.

நேற்று முதல் சுற்று ஆட்டங்கள் நடைபெற்றன. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவில் சீனாவின் கின்வென் ஜெங், ருமேனியாவின் அன்கா டோடோனியுடன் மோதினார்.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய அனுபவ வீராங்கனையான கின்வென் ஜெங் 7-6 (7-3), 6-1 என்ற செட் கணக்கில் அன்கா டோடோனியை வீழ்த்தி 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)



# ஆண்ட்ரீவா அசத்தல்



மெல்பேர்ன், ஜன.13

அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடரில் மிர்ரா ஆண்ட்ரீவா 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

இந்தத் தொடரில் நேற்று முதல் சுற்று ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் ரஷ்யாவின் மிர்ரா ஆண்ட்ரீவா, செக் குடியரசின் மேரி பவுஸ்கோவாவுடன் மோதினார்.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய மிர்ரா ஆண்ட்ரீவா 6-3, 6-3 என்ற நேர் செட் கணக்கில் மேரி பவுஸ்கோவாவை வீழ்த்தி 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)

# 4 விக்கெட் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா வெற்றி



சிட்னி, ஜன.13

மகளிர் ஆஷஸ் தொடரில் 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியா - இங்கிலாந்து ஆண்கள் கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான ஆஷஸ் தொடர் போலவே, மகளிர் அணிகளுக்கு இடையேயும் ஆஷஸ் தொடர் நடத்தப்பட்டு வருகிறது. இதன்படி இந்த ஆண்டிற்கான மகளிர் ஆஷஸ் தொடர் நேற்றுத் தொடங்கியது. இந்தத் தொடர் இம்முறை அவுஸ்திரேலியாவில் நடைபெறுகிறது.

இதன்படி இங்கிலாந்து அணி அவுஸ்திரேலியாவுக்கு சென்று தலா 3 போட்டிகள் கொண்ட ரி - 20 மற்றும் ஒருநாள் தொடர்களிலும், ஒரே ஒரு போட்டி கொண்ட டெஸ்ட் தொடரிலும் விளையாடுகிறது. இதில் முதலில் ஒருநாள் தொடர் நடைபெறுகிறது. இதன்படி முதல் ஒருநாள் போட்டி சிட்னி மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 43.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 204 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இங்கிலாந்து தரப்பில் அதிகபட்சமாக ஹெதர் நை 39 ஓட்டங்கள் எடுத்தார். அவுஸ்திரேலியா தரப்பில் ஆஷ்லே கார்ட்னர் 3 விக்கெட்கள், கிம் கார்த், அன்னபெல் சதர்லேண்ட், அலனா கிங் ஆகியோர் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.

தொடர்ந்து 205 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி 38. 5 ஓவர்களில் 6 விக்கெட்கள் மட்டும் இழந்து 206 ஓட்டங்கள் எடுத்து 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அவுஸ்திரேலியா தரப்பில் அதிகபட்சமாக அலிசா ஹீலி 70 ஓட்டங்கள் எடுத்தார். இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 1 -0 என அவுஸ்திரேலியா முன்னிலையில் உள்ளது.(எ)

# சாண்ட்னெர் தலைமையில் நியூசிலாந்து அணி அறிவிப்பு

வெலிங்டன், ஜன.13

சாண்ட்னெர் தலைமையில்சம்பியன்ஸ் கிண்ண தொடருக்கான நியூசிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

8 அணிகள் கலந்து கொள்ளும் சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடர் அடுத்த மாதம் 19ஆம் திகதி தொடங்கி மார்ச் 9ஆம் திகதி வரை நடைபெறுகிறது. இதில் பங்கேற்கும்

நியூசிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணிக்கு மிட்செல் சாண்ட்னெர் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த அணியில் சிரேஷ்ட வீரர்களான கேன் வில்லியம்சன், டெவான் கான்வே, ரச்சின் ரவீந்திரா, லாக்கி பெர்குசன், ரொம் லேதம், டேரில் மிட்செல் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

அத்தோடு, மைக்கேல் பிரேஸ்வெல், மார்க் சப்மேன், மேட் ஹென்றி, வில் ஓ ரூர்க், க்ளென் பிலிப்ஸ், பென் சீயர்ஸ், நாதன் ஸ்மித், வில் யங் ஆகியோர் இடம்பிடித்துள்ளனர். (எ)

# இந்திய அணியில் ஷமி

மும்பை, ஜன.13

இங்கிலாந்துக்கு எதிரான ரி - 20 தொடரில் விளையாடவுள்ள இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில்,முன்னணி வேகப்பந்து வீச்சாளரான முகமது ஷமி நீண்ட நாட்கள் கழித்து அணிக்குத் திரும்பியுள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடவுள்ளது. இதன்படி இவ்விரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது போட்டி வரும் 22ஆம் திகதி கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த தொடருக்கான இங்கிலாந்து அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டு விட்டது. இந்திய அணி அறிவிக்கப்படாமல் இருந்தது.

இந்த நிலையில் இந்த தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. சூர்யகுமார் யாதவ் தலைமையிலான அந்த அணியில் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான முகமது ஷமி நீண்ட நாட்கள் கழித்து இந்திய அணிக்கு திரும்பியுள்ளார்.

இந்திய அணி விவரம் வருமாறு,சஞ்சு சாம்சன், அபிஷேக் சர்மா, ஹர்திக் பாண்டியா, திலக் வர்மா, ரிங்கு சிங், நிதிஷ் ரெட்டி, அக்சர் பட்டேல், ஹர்ஷித் ராணா, அர்ஷ்தீப் சிங், வருண் சக்கரவர்த்தி, ரவி பிஷ்னோய், வாஷிங்டன் சுந்தர் மற்றும் துருவ் ஜூரெல் ஆகியோர் அணியில் இணைக்கப்பட்டுள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநுரவின் அரசிலும்...

இரண்டு சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

அச்சமயத்தில் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளில் சிலர் 13ஆவது திருத்தச் சட்டத்தை கடுமையாக எதிர்த்தார்கள். சிலர் 13ஆவது திருத்தச் சட்டத்தை உடன் அமுலாக்குவதற்கு முயற்சித்தார்கள். ஆனால் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளில் எவரும் அதனை முறைப்படியாக நடைமுறைப்படுத்தி பரிநாமரீதியான வளர்ச்சியை அடைந்து அதிகாரப் பகிர்வினைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சிக்கவில்லை.

இதன் காரணமாக, தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் பத்து பாவச் செயல்களை இழைத்துள்ளார்கள் என்பது எனது நிலைப்பாடாகிறது. அவர்கள் செய்துள்ள அந்தப் பத்து பாவச் செயல்களை நான் பட்டியலிடுகின்றேன். அதில் முதலாவதாக, தமிழ்நாடு வழியாக டில்லிக்கு ஆணையிட முடியும் என்று கருதியமையாகும். இரண்டாவதாக, புலம்பெயர்ந்துள்ள தமிழர்களுக்கு காணப்படும் மேற்கத்தேய ஆதரவானது டில்லியை விடவும் முக்கியமானது என்று கருதியமையாகும்.

மூன்றாவதாக, தெற்கில் இந்திய எதிர்ப்பு மற்றும் அதிகாரப்பகிர்வு ஆகியவற்றுடன் ஜே.வி.பி மிக வேகமாக வளர்ந்து கொண்டிருந்த தருணத்தில், மாநில அதிகாரத்துக்கான அதிகாரப் பகிர்வு நூலில் தொங்கிக்கொண்டிருந்த தருணத்தில் 13ஆவது திருத்தச்சட்டத்தினை வரதராஜப் பெருமாள் தலைமையிலான மாகாண அரசு உடனடியாக அமுலாக்குவதற்கு முனைந்தமையாகும்.

நான்காவதாக, இந்திய அமைதி காக்கும் படைக்கு எதிராக தனிநாடு கோரிப் போரிட்டு வந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரிப்பதன் ஊடாக 13ஆவது திருத்தத்தைக் கடந்து அப்பால் செல்லதற்கு முயன்றமையாகும்.

ஐந்தாவதாக, தமிழ் மக்களுக்கு அதிகாரப்பகிர்வை வழங்குவதற்கு சாதகமான மனோநிலையில் இருந்த இந்திய முன்னாள் பிரதமர் ரஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்டதன் பின்னர் அந்த ஆதரவைப் பெறுவதற்கு முயன்றமையாகும்.

ஆறாவதாக, பிரபாகரன் மரணிக்கப்பட்டு விடுதலைப்போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதன் பின்னரும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தைகளுக்கான அடிப்படையாகவோ, அல்லது தொடக்கப்புள்ளியாகவோ 13ஆவது திருத்தச்சட்டத்தினை நிராகரித்தமை யாகும்.

ஏழாவதாக, உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் இணைத்தலைவர்க ளாக நேர்வே மற்றும் தென்னாபிரிக்கா செயற்பட்ட காலத்தில் சந்திரிகா, ரணில் போன்றவர்கள் 13ஆவது திருத்தச் சட்டத்தினை விடுத்துச் செயற்படுவ தற்கான அனைத்து சாத்தியமான வழிகளையும் ஏற்படுத்திக்கொடுத்தமையாகும்.

எட்டாவதாக, வடக்கு, கிழக்கு மாகாண சபைகளைப் பாதுகாப்பதற்கு பதிலாக சீனாவுக்கு எதிரானதொரு அரணாக அதனை காண்பித்துக் கொண்டிருக்கின்றமையாகும். ஒன்பதாக வதாக, டில்லியானது தனது பொரு ளாதார மற்றும் மூலோபயங்களை பாதுகாப்பதற்காகநகர்ந்தபோது 13ஆவது திருத்தச் சட்டத்தினை செயற்படுத்துவதில் தாமதமாக இந்தியாவின் உதவியை நாடும் போக்காகும்.

பத்தாவதாக, சமஷ்டி முறைமையைக் கோரிக்கொண்டு 13ஆவது திருத்தச்சட்டத்தினையும் டில்லியுடனான இணைப்பினை துண்டிக்கும் போக்கானது அதிகாரப்பகிர்வு மறைந்து போவதற்கு காரணமாகின்றது. இவ்விதமான நிலைமையில், தற்போது 13ஆவது திருத்தச்சட்டம் அல்லது மாகாண ரீதியான அதிகாரப்பகிர்வுக்கு வாய்மொழி ரீதியான உறுதிமொழியைக் கூட வழங்காத தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கம் ஆட்சியில் உள்ளது.

அதுமட்டுமன்றி குறித்த அரசாங்கத்தின் அமைச்சரவையில் வடக்கு தமிழர்கள் இல்லை, அரசுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் காணப்படுகின்றது. அரசுக்கு தமிழ்தேசியம் சார்ந்த நாடுகளிடத்தில் நட்பற்ற நிலைமையும் காணப்படுகின்றது. இத்தகைய அரசாங்கமொன்றை கையாளவேண்டிய நிலைமையானது தற்போது தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி தமிழ்த் தேசியவாதத்தின் சுயாட்சி, அதியுச்ச அதிகாரப் பகிர்வு உள்ளிட்ட வலியுறுத்தல்களுக்கு அரசாங்கத்திடம் உரிய பதில்கள் மட்டுமல்ல அங்கீகாரம் கூட இல்லை. மேலும் 1983ஆம் ஆண்டில் தோற்றம் பெற்ற இந்திய இலங்கை படைகளுக்கு எதிரான தமிழ் இளைஞர்களின் ஆயுதக் கிளர்ச்சியால் 13ஆவது திருத்தச்சட்டத்துக்கு அப்பால் எதனையும் பெற்றுக்கொள்ள முடிந்திருக்கவில்லை.

ஒற்றையாட்சியை நிராகரித்ததன் காரணமாக, 13ஆவது திருத்தச் சட்டத்தினையும் ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமைகள் ஏற்பட்டதோடு சமஷ்டி நோக்கி செல்ல முடியாத நிலைமைகளும் ஏற்பட்டுள்ளதோடு தற்போது ஒற்றையாட்சிக்குள் 13ஐயும் இழந்துவிடும் நிலைமையே வந்துள்ளது. அதுமட்டுமன்றி ஒற்றையாட்சிக்கு வெளியில் அதிகாரப்பகிர்வினைப் பெறுவதற்கான சாத்தியப்பாடுகளும் காணப்படவில்லை.

வடக்கு தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளின் ஒத்துழையாமையானது இந்திய, இலங்கை உறவின் நிகழ்ச்சி நிரலில் இருந்து தமிழர்கள், அதிகாரப்பகிர்வு, 13ஆவது திருத்தச்சட்டம் ஆகிய விடயங்கள் நீக்கப்படுவதற்கு காரணமாகின்றது.

தற்போது தமிழ்த் தேசிய அரசியல்வதிகள் வரலாற்று ரீதியாக மிகவும் பலவீனமாக உள்ளநிலையில் 13ஆவது திருத்தச்சட்டத்தை நிராகரிப்பதும், டில்லியின் இணைப்பை துண்டிப்பதும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதற்கான அதிகாரப்பகிர்வுக்கான வெளிப்புற செல்வாக்கை இழக்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது-என்றார். (அ)

## ஒன்றரை...

குழந்தை உறங்கிவிட்டது. உறங்கிய குழந்தை நேற்று முன் தினம் இரவு எழுந்து வாந்தி எடுத்துவிட்டு அழுத வேளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. இருப்பினும் நேற்று அதிகாலை குழந்தை உயிரிழந்தது.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். சுவாசக் குழாயில் வேர்க்கடலை சிக்கியதால் மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. (அ-05)

## வடக்கு...

இலவசமாக அல்லது தவணை அடிப்படையில் குறித்த உழவு இயந்திரங்களை கோரினர். ஆனால் இதுவரை எந்தவித நட வடிக்கையும் எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

மாகாண சபையால் உழவு இயந்திரங்களின் உரிமை விவசாய சேவை மையங்களுக்கு மாற்றப்படவில்லை.

கொள்முதல் வழிகாட்டுதல்களின்படி விவசாய சேவை மையங்களால் நடத்தப்பட்ட ஏல உரிமை முறையாக மாற்றப்படவில்லை.

விவசாய சேவைக் குழுக்கள் மற்றும் விவசாய அமைப்புகள் விவசாயிகளுக்கு நன்கொடை அளிக்கவோ அல்லது விற்கவோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

உழவு இயந்திரங்களை பயன்படுத்த வேண்டும் அல்லது விவசாயிகளின் தேவைகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இல்லையேல் விற்பனை செய்துவிட்டு பணத்தினை வேறு தேவைகளுக்கு பயன்படுத்த வேண்டும் என விவசாயிகள் தெரிவித்தனர். (அ)

# கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த சொகுசு கப்பல்!

கொழும்பு, ஜன. 13

எம்.வி. கிறிஸ்டல் சிம்பொனி எனப்படும் சொகுசு பயணக் கப்பல் மாலைத்தீவுகளில் இருந்து நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்தக் கப்பலில் 211 பயணிகளும் 417 பணியாளர்களும் வருகை தந்தனர்

இந்தக் கப்பலில் வருகை தந்த பயணிகள் கொழும்பு, காலி, திருகோணமலை உள்ளிட்ட பகுதிகளை பார்வையிட உள்ளதுடன் இந்த கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் இருந்து சைப்ரஸூக்குப் புறப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## புலம்பெயர்...

பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

பல காலமாக ஏதிலிகளாக வாழும் இலங்கையர்களை சந்தித்ததுடன் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலினையும் தாம் இந்த விழாவின் போது சந்தித்ததாக சாணக்கியன் கூறினார். (அ)

## கடற்றொழிலுக்கு...

கடற்றொழிலுக்கு சென்ற நிலையில், ஒரு மீனவருக்கு நேற்று உடல் சுகயீனம் ஏற்பட்டது. அவரை ஊர்காவற்துறை வைத்தியசாலையில் சேர்ப்பித்தவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (அ)

## நாளை...

அத்துடன் சீன ஜனாதிபதி ஷி ஜின் பிங், பிரதமர் லி கியாங், வெளிவிவகார அமைச்சர் வோங் யீ, சீன பதசிய மக்கள் காங்கிரஸின் தற்போதைய நிழலக் குழுவின் தழலவர் ஜாஓ லெர்ஜி மற்றும் அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் டோங் ஜூன் உட்பட சீன கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரையும் பெய்ஜிங்கில் சந்தித்து இருதரப்பு கலந்துரையாடல்களில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையிலான குழுவினர் பங்கேற்க உள்ளனர்.

ஜனாதிபதி அநுரவின் இரண்டாவது உத்தியோகபூர்வ விஜயமாக சீன அமைந்துள்ள நிலையில் இந்தியா உட்பட சர்வதேச நாடுகளின் கவனத்தை வெகுவாக ஈர்த்துள்ளது. சீன விஜயத்தில் மிகவும் முக்கியமான பல விடயங்கள் உள்ளன. அதில் மிகவும் முக்கியமானது, இந்தியப் பெருங்கடலில் சீன ஆராய்ச்சிக் கப்பல்கள் நுழைவது தொடர்பானதாகும். இதற்கான பதிலுடனேயே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சீனா செல்வதுடன், இலங்கை எதிர்பார்த்தை விட பல உதவித் திட்டங்கள் கிடைக்கப் பெறவுள்ளதாக அரசாங்கத்தின் முக்கியஸ்தர் ஒருவர் குறிப்பிட்டார்.

சீன - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம், துறைமுக நகர் முதலீடுகள், ஹம்பாந்தோட்டையில் உத்தேசிக்கப்படுகின்ற எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் சீன கப்பல் விஜயங்கள் உட்பட மேலும் சில விடயங்கள் தொடர்பில் பீஜிங் பேச்சுவார்த்தைகளின்போது தீர்மானிக்கப்பட உள்ளன. எனினும், சீன ஆராய்ச்சிக் கப்பல்கள் தொடர்பான விடயத்தில் திருத்தப்பட்ட நிலையான மூலோபாய ஒத்துழைப்பு விதிமுறையுடனேயே ஜனாதிபதி அநுர சீனாவுக்கு செல்கிறார்.

இலங்கைக்கு மாத்திரமன்றி ஏனைய சர்வதேச நாடுகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் இந்த சீன ஆய்வுக் கப்பல்கள் இந்தியப் பெருங்கடலுக்குள் பிரவேசிப்பது தொடர்பான வழிமுறைகள் புதிய திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது. எனினும் அவை எவை என அரசாங்கம் வெளிப்படுத்தவில்லை. சீனா விஜயத்தின் பின்னர் வெளிப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. ஆனால் தமது ஆய்வுக் கப்பல்களை இலங்கை கடற்பரப்பிற்கு மேலும் அனுப்ப வேண்டும் என்ற நிலைப்பாட்டில் சீனா உறுதியாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மீனவர்கள்...

இந்த நிலையில், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளால் இந்திய உதவி தூதுவருக்கு மனுவொன்றும் கையளிக்கப்பட்டுள்ளது. (அ)

## அரச...

அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த வீட்டுத்திட்டங்களில் சுமார் 4000 வீடுகள் அமைந்துள்ளன.

சிக்கலுக்குள்ளான ஒப்பந்ததாரர்களுக்கு பதிலாக புதிய ஒப்பந்ததாரர்கள் மூலம் கட்டுமானப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (அ)

## மார்ச்...

நடத்தக்கூடிய சட்டரீதியான இயலுமைகள் கிடைக்கப் பெறும்.

அதற்கமைய, மார்ச் மாத இறுதியில் அல்லது ஏப்ரல் மாத ஆரம்பத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த முடியும்.

அத்துடன், இந்த தேர்தலுடன் தொடர்புடைய பல விடயங்கள் குறித்து அனைத்து தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளுக்கும் இடையில் எதிர்வரும் 17 ஆம் திகதி கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தின் பின்னர் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## வாகன...

மாதம் தளர்த்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், தற்போது புதிய வரி கொள்கைகளுக்குக்கு மேலாக வாகன இறக்குமதிக்கான ஏனைய அனைத்து வரிகளும் சேர்க்கப்பட்ட பின்னரான முழு வரியானது 500 சதவீதமாக அதிரிக்கக்கூடும் என இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் பிரசாத் மானகே தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த வருடத்திற்குள் 50,000 வாகனங்களை இறக்குமதி செய்ய முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் இறக்குமதி செய்யப்படும் அனைத்து வாகனங்களுக்கும் அரசாங்கம் அறிவிக்கும் வரி விகிதங்களால் நுகர்வோர் பயனடையமாட்டார்கள் என பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை சிரேஷ்ட பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள வரி கொள்கைக்கும் முன்னர் இருந்த வரிக் கொள்கைக்கும் பாரிய வித்தியாசங்கள் இல்லை.

இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கான வரிகள் சாதாரணமாக 300 வீதத்திற்கும் 400 வீதத்திற்கும் இடையில் உள்ளது.

இந்தநிலையில், வாகன விற்பனையாளர்கள் வாகன சந்தையில் பாரிய மாபியாவை முன்னெடுத்து வருகின்றனர்.

அத்துடன், குறிப்பிட்ட சில வாகனங்களுக்கான விலை முகாமைத்துவத்தை பேணி வருகின்றனர்.

இதன் காரணமாக நுகர்வோர் பயனடையமாட்டார்கள்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# 80 ஆயிரம் வேட்புமனு இரத்து!

## தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை

கொழும்பு, ஜன. 13

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடுவதற்காக தாக்கல் செய்யப்பட்டிருந்த 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேட்புமனுக்கள் இரத்துச் செய்யப்படவுள்ளன. அதற்கான நடவடிக்கைகளை தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது.

கடந்த 2023ஆம் ஆண்டின் மார்ச் மாதம் நடைபெறவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள், கடந்த அரசாங்கத்தினால் திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில், முன்னைய வேட்பு மனுக்களை இரத்துச் செய்தும், புதிதாக வேட்பு மனுக்களைக் கோரும் வகையிலும் தற்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அத்துடன், நாடெங்கிலும் உள்ள 320 உள்ளூராட்சி மன்றங்களின் 8711 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக, எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்குள் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதன் ஒரு கட்டமாக கடந்த ஆண்டில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களில் போட்டியிடுவதற்காக தாக்கல் செய்யப்பட்ட 80 ஆயிரத்து 670 வேட்பு மனுக்கள் தற்போது இரத்துச் செய்யப்படவுள்ளன. (அ)

# சஜித்தும் ரணிலும் இணையவேண்டும்

## நாமல் ராஜபக்ஷ கருத்து



கொழும்பு, ஜன. 13

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து சென்றவர்கள் மீள ஒன்றிணைய வேண்டும் என்று பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையின் பழமையான கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி பலமடைய வேண்டும் எனவும் அவர் கருத்து வெளியிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்றிணைய வேண்டும் என வலியுறுத்தப்பட்டுவரும் நிலையிலேயே நாமல் ராஜபக்ஷ இவ்வாறு கூறினார்.(அ)

# செயற்கை நுண்ணறிவு தேசிய கொள்கை; மக்களின் கருத்துக்களை பெற தீர்மானம்



கொழும்பு, ஜன. 13

செயற்கை நுண்ணறிவு குறித்த தேசிய கொள்கையை உருவாக்குவதற்காக பொதுமக்களின் கருத்துக்களை பெறுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக டிஜிற்றல் பொருளாதார பிரதியமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

செயற்கை நுண்ணறிவு தொடர்பில் தேசிய கொள்கையை உருவாக்குவதற்காக அரசாங்கம் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

இந்த தேசிய கொள்கையை உருவாக்குவதற்காக, பொதுமக்களின் கருத்துக்களை பெற்றுக்கொண்டதன் பின்னர் குறித்த தேசிய கொள்கையை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள குழுவானது, அவற்றை ஆராய்ந்து இறுதி வரைவினை தயாரிக்கவுள்ளது.

இதற்கான மக்களின் கருத்துக்களை பெற்றுக் கொள்வதற்காக மார்ச் மாதம் 14ஆம் திகதி வரையில் கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

குறித்த நடவடிக்கைகயை முன்னெடுப்பதன் ஊடாக, நுண்ணறிவு மேம்பாடு மற்றும் டிஜிற்றல் பொருளாதாரத்தில் அதன் ஈடுபாடு மற்றும் எதிர்காலத்தில் முன்னோக்கி பயணிப்பதற்காக நாட்டின் அர்ப்பணிப்புமிக்க உறுதிப்பாட்டை வெளிப்படுத்துவதே நோக்கமாக உள்ளது - என்றார். (அ)

# பஸில் ராஜபக்ஷவுக்கு எதிராக தீவிரமாகியுள்ள விசாரணைகள்

## விரைவில் வழக்கு! அநுர அரசு அதிரடி!!

கொழும்பு, ஜன. 13

**முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தொடர்பான விசாரணைகள் தற்போது இரகசியமான முறையில் முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.**

அதன்படி பஸில் ராஜபக்ஷவுடன் கடந்த காலங்களில் நெருக்கமாக செயற்பட்ட வர்த்தகத் துறையினர், முக்கிய அதிகாரிகள் போன்றோரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன.

பஸில் ராஜபக்ஷவின் சொத்துக்கள், சேமிப்புகள், வீடு உள்ளிட்ட சொத்துக்கள் குறித்து புலனாய்வுப் பிரிவினர் தீவிரமாக தக வல்களைச் சேகரிக்கத் தொடங்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் சர்வதேச பிடியாணை பெறக்கூடிய வகையில் மிக விரைவில் பஸில் ராஜபக்ஷவுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக் கொன்றைத் தொடுப்பதற்கான ஆவணங்கள் சேகரிக்கப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் சட்ட மா அதி பருடனான சந்திப்பின்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இந்த விடயம் குறித்து முக்கியமாக கேட்டறிந்து கொண்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்ட நிறுவனத்துடன் மருந்து ஒப்பந்தம்!

## மருத்துவர் தொழிற்சங்க கூட்டமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 13

நோயாளிகளின் வாய்களை சுத்தம் செய்யப் பயன்படுத்தப்படும் மருந்துக்காக கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள பங்களாதேஷ் நிறுவனமொன்றுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு குற்றம்சாட்டியுள்ளது.

செய்தியாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு இந்த குற்றச்சாட்டை முன்வைத்த அதன் தலைவர் வைத்தியர் சமல் சஞ்சீவ, குறித்த நிறுவனம் மீதான சர்ச்சையையும் பொருட்படுத்தாது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டு ஜூன் மாதம், நோயாளிகளின் வாய்களை சுத்தம் செய்யப் பயன்படுத்தப்படும் க்ளோஎக்சடின் 270,000 மருந்து போத்தல்களைக் கொள்வனவு செய்வதற்காக, அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் விலைமனுவை கோரியிருந்தது.

கோரப்பட்ட விலைமனுக்கல் தொடர்பில் கடந்த டிசெம்பர் 20 ஆம்திகதி அன்று முடிவு எட்டப்பட்டது.

அதன்படி மிகக் குறைந்த ஏலத் தொகையை முன்வைத்த நிறுவனத்துக்கு விநியோக ஒப்பந்தத்தை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இருப்பினும், இந்த நிறுவனம் கடந்த நவம்பர் மாதம் 6 ஆம் திகதி அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள ஒரு நிறுவனம் என்றும் , அது நிதி பரிவர்த்தனைகளில் இருந்து தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள ஒரு நிறுவனத்திடமிருந்து பெறப்படும் மருந்துகளால் நோயாளர்களும் ஏதேனும் பாதிப்புகள் ஏற்படுமாயின் அதற்கு தற்போதைய சுகாதார அமைச்சரே பொறுப்பு கூறவேண்டும் என மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பின் தலைவர் வைத்தியர் சமல் சஞ்சீவ தெரிவித்தார். (அ)

# ஐக்கிய மக்கள் சக்தியை சீரமைக்க சஜித் தீர்மானம்

## இம்தியாஸ் தலைமையில் நால்வர் கொண்ட குழு

கொழும்பு, ஜன. 13

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைத்துவம் மற்றும் பதவி நிலைகளில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்று அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் உட்பட பங்காளி கட்சித் தலைவர்கள் முன்வைந்த யோசனைகளை கருத்திற் கொண்டு கட்சியை மறுசீரமைப்பதற்கு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தீர்மானித்துள்ளார்.

இதற்கமைய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர்களான ரஞ்சித் மத்தும பண்டார, கபீர் ஹாசிம் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோரை உள்ளடக்கிய வகையில் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

கட்சி மறுசீரமைப்பு தொடர்பான பரிந்துரைகளை வெகுவிரைவில் முன்வைக்குமாறு இந்த குழுவுக்கு பணிக்கப்பட்டுள்ளது. இந்த குழு எதிர்வரும் வாரமளவில் கூடவுள்ளதாக அறிய முடிகிறது.

ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழுக் கூட்டம் அண்மையில் இடம் பெற்றுள்ளது. இதன்போது வழமைக்கு மாறாக செயற்குழு உறுப்பினர்களுக்கு கூட்டத்தின் போது பேசப்படவேண்டிய விடயங்கள் குறித்து ஒழுங்குப் பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் கட்சி மறுசீரமைப்பு தொடர்பில் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு அனுப்பி வைத்த 12 விடயங்கள் உள்ளடங்கிய கடிதம் குறித்து கலந்துரையாடப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்த கடிதத்துக்கு சஜித் பதிலளிப்பதை தாமதப்படுத்துவதற்கு செயற்குழுவின் முன்னிலை உறுப்பினர்கள் எதிரப்பு தெரிவித்துள்ளனர்.

செயற்குழு கூட்டத்தின்போது இம்தியாஸ் பாக்கீர் மாக்கரின் 12 யோசனைகள்.உள்ளடங்கிய கடிதம் பேச்சுக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. மாறாக கூட்டுறவு தேர்தல் உட்பட பிற விடயங்கள் பற்றி பேசப்பட்டுள்ளன.

இதன்போது எழுந்து கருத்து தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் இந்த சந்தர்ப்பத்தில் நகைச்சுவை பேசிக் கொண்டு தற்காலிக தீர்மானத்தை எடுக்க முடியாது. தொடர்ந்து தோல்வியடைய முடியாது.

கட்சிக்கு வாக்களித்த மக்களுக்காக எமக்கு பொறுப்புள்ளது. அத்துடன் எதிர்க்கட்சி என்ற ரீதியிலும் எமக்கு பொறுப்புள்ளது. நகைச்சுவைக்கு பதிலாக கட்சியை மறுசீரமைக்கும் விடயங்கள் பற்றி பேசுவோம் என்று குறிப்பிட்டார்.

மரிக்காரின் கருத்துக்கு செயற்குழு உறுப்பினர்கள் ஆதரவளித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து கருத்து தெரிவித்துள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க இம்தியாஸ் குறிப்பிடுவது உண்மை, மறுசீரமைப்பு என்பது வெற்றிக்காக செய்யவேண்டியது.

இதனை தாமதப்படுத்துவது ஒரு தரப்பினரது செயற்பாடு. தலைவர் உட்பட அனைவரும் தவறுகளை திருத்திக் கொண்டு முன்னோக்கிச் செல்லாவிடின் அது தோல்விக்கு காரணமாக அமையும் என்று குறிப்பிட்டார்.

இதன்போது கருத்து தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ இம்தியாஸ் முன்வைத்த யோசனைகள் பெறுமதியானவை. இருப்பினும் அனைத்துக்கு முன்னரும் கடிதம் ஊடகங்களுக்கு சென்றுவிட்டது என்று குறிப்பிட்டார்.

இதற்கு அக்கணமே எதிர்ப்பு தெரிவித்துள்ள இம்தியாஸ் பாக்கீர் அந்த கடிதத்தை உங்களுக்கும், கட்சியின் பொதுச்செயலாளருக்கும்,தேசிய அமைப்பாளருக்கும் மாத்திரமே அனுப்பி வைத்தேன் என்று கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.01.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.